### அத்தியாயம் 1

# சபையில் நிலவிய பிரிவினைகளும் சண்டைகளும்

கிரேக்க-ரோம நாடுகளில் மக்கள் கடிதங்கள் எழுதும் பொழுது, கடிதத்தின் துவக்கத்தில் தாங்கள் யார் என்று தங்களை அறிமுகம் செய்து கொள்வார்கள். மேலும் தங்கள் கடிதத்தின் மூலம் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய அடிப்படைக் கருத்துக்களையும் வெளிப்படுத்தியிருப்பார்கள். கடிதத்தை வாசிப்பவர்களுக்கு தன் அதிகாரத்துவ தகுதியை உறுதிப்படுத்தியும், அவர்கள் மீது தான் கொண்டுள்ள அன்புடன் கூடிய கரிசனையைக் காட்டும் வகையில் பவுல் தன் நிருபத்தை எழுதத்துவங்கினார். தேவனுடன் உள்ள உறவைக் குறித்த காரியங்களில் கடைப்பிடிக்க வேண்டியது என்னவெனில் திருச்சபை என்னும் சமுதாயத்தில் ஒருவருக் கொருவர் இடையே காட்டும் செயல்பாடுகள் மூலமாகவே இந்த உறவு சாத்தியமாகும்.

பவுலின் நிருபத்தை வாசிப்பவர்களின் நிலை என்னவெனில் ஒரு சில வருடங்களுக்கு முன்னர், அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஒரு சிறிதும் அறிந்திருக்கவில்லை, “தேவனுடைய சபை” என்ற சொற்றொடர் அவர்களுக்கு ஒன்றாகவே காணப் பட்டிருக்கும். ஆனால் தற்சமயம் சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. கடந்த காலத்தில், பவுல் திருச்சபையுடன் பழகியிருந்ததால் பெற்றுள்ள அனுபவத்தின் மூலம், அவர்களிடம் காணப்படும் பின்மாற்றங்களை கிறிஸ்தவர்களாகிய அவர்கள் மேற்கொள்வதற்கு பவுலால் இப்பொழுது உதவ முடியும். கிறிஸ்துவினுடையவர்களாக இருந்தாலும் அதன் பயனாக பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற முடியாது என்று அறிந்து கொண்டனர். விசுவாசிகள் ஒருவரை ஒருவர் தாங்குவதற்கு தவறிய தன் விளைவாக கொரிந்து சபை கிறிஸ்தவர்கள் சில பின்னடைவுகளை சந்தித்தார்கள். சத்துருக்களிடமிருந்தும், தேவனற்ற மக்கள் மூலமாக ஏற்பட்ட அழுத்தங்களால் இதர குழப்பங்கள் சபையில் காணப்பட்டது.

## பவுல் சொஸ்தெனேயிடமிருந்து வந்த வாழ்த்துக்கள் (1:1-3)

**[1]தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், [2]கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது: [3]நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**

**வசனம் 1.** பெரும்பான்மையான கடிதங்களைப் பவுல் எழுதும் பொழுது, கடிதத்தின் ஆரம்பத்தில் தன்னை **அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டவர்**, என்று அறிமுகம் செய்து கொள்வார். பிலிப்பியர், தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டு நிருபங்கள், மற்றும் பிலேமோனுக்கு எழுதிய நிருபம் இதற்கு விதிவிலக்கு. சாதாரணமாக ஒரு நண்பனுக்கு எழுதும் கடிதத்தில் தன் அப்போஸ்தல அதிகாரத்தை உறுதிப்படுத்தி எழுதுவது என்பது எதிர்பாராத ஒன்று, இவ்வாறு எழுதுவது நண்பனை மனவேதனைப் படுத்தும் என்பதும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்று. இன்றைய நிலையில், எம்.டி; பி.ஹெச்டி (டாக்டர் பட்டம்) போன்ற பட்டம் பெற்றவர்கள், சபைக்கு வரும் பொழுது, இளம் வயதினர் கூட அவர்களை அவர்கள் முதல் பெயரை வைத்துத்தான் அழைப்பார்கள். பொதுவாக நண்பர்களும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் பொழுது, பட்டத்தைக் குறிப்பிட்டுப் பேசமாட்டார்கள். “அப்போஸ்தலன்” என்று பவுல் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதால் பவுல் தனக்கும், தன் நிருபத்தை வாசிப்பவர்களுக்கும் இடையே சற்று இடைவெளி விட்டே பழகுவார். அவர் அவர்கள் சிநேகிதன். ஆனால் அன்புள்ள பெற்றோர் போல, சிநேகிதனை விட மேலானவராக இருப்பார். பவுல் தேவனால் அழைக்கப்பட்டவர். நட்பு ஒருபுறமிருக்க, அவரோ அல்லது அவர்களோ அவர் **இயேசு கிறிஸ்துவின்** அப்போஸ்தலன் என்பதை மறந்துவிட வேண்டும்.

1 கொரிந்தியரில் பவுல் தன் அப்போஸ்தலத்துவத்தை நிலை நாட்டியதாகத் தெரியவில்லை. அவரும், அவர் நிருபத்தை வாசிப்பவர்களும், அவர் தன் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை செயல்படுத்த வேண்டும் என்றே எதிர்பார்த்தனர். கொரிந்திய சபைக்குத்[1] தேவையானவற்றைப் பற்றிப் பேச, அப்போஸ்தலத்துவம் ஓர் மேடையாக பயன்படுத்தப்பட்டது. ஆனால் அது கிறிஸ்துவின்

செய்தியை உலகிற்குக் கொண்டுவர ஓர் உந்து சக்தியாக இருக்கவும் அவரை நிர்ப்பந்தப்படுத்தியது. தான் ஓர் அப்போஸ்தலன் என்று கூறிக்கொள்வதற்குச் சான்றாக அவர் கூறுவதில் ஒன்று நான் தேவனை தரிசித்தேன் என்பது (1 கொரி. 9:1; 15:8); ஆனால் அவர் இந்த உரிமையை சற்று அதிகமான ஆதாரத்துடனேயே நிலைநாட்டுகிறார். தான் இந்த அப்போஸ்தலத்துவத்தைப் பெற்றது தேவன் அவரைத் தனிப்பட்ட விதத்தில் அழைத்ததால் தான் (கலா. 1:15) என்றும் தன்னிடத்தில் தேவனுடைய ஆவி உண்டென்றும் எண்ணுகிறார் (1 கொரி. 7:40; கலா. 3:2). முக்கியமாக கொரிந்தியரிடம் பவுலின் அப்போஸ்தலத்துவம் தெளிவாகக் காணப்பட்டது. அவர்தான் அவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார். அவர் தான் அவர்கள் மீது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அளித்தவர் (2 கொரி. 3:2, 3).

பவுல் அப்போஸ்தலத்துவத்திற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு, தான் ஆயத்தமாக இருப்பதாக, தன் நிருபத்தை வாசிப்பவர்களுக்கு நிருபத்தை எழுதத் துவங்கியபொழுதே எழுதி விட்டார். தன் தலைமைத்துவத்திற்கு அவர்களின் வெறுப்பு தான் தனக்கு பிரதிபலனாகக் கிடைப்பதாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ள தான் ஆயத்தமாக இருப்பதாகக் கூறினார். தெய்வபயமற்ற பண்புகள், கிறிஸ்தவ அறிக்கைக்கு எதிரான செயல்பாடுகளில், அவர் தேவன் பக்கம்தான் தன் நிலையைக் காத்துக் கொள்வார் என்று அவர்கள் எதிர்பார்க்கலாம். அடுத்து எழுதப் போகிற கடிதம் மிகவும் தற்செயலாகவும், நட்பை வெளிப்படுத்தும் தனமையுடையதாகவும் காணப்படவேண்டும். தன் உடன் வேலையாட்களாகிய தீத்து, தீமோத்தேயுவுக்கு எழுதும் கடிதங்களில் கூட தன்னை “ஓர் அப்போஸ்தலன்” என்றே அறிமுகப்படுத்துவார். இக் கடிதங்கள் தன் தனிப்பட்ட நண்பர்களுக்கு எழுதப்பட்டாலும், தான் கூறும் ஆலோசனையும் கடிந்து கொள்ளுதலும் அந்த சுவிசேஷகர்களுக்கு பொதுப் பார்வையாளர்கள் மத்தியில் வழி காட்டிகளாக இருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

இந்நிருபத்தின் வாழ்த்துதலின் **சொஸ்தெனேயும்** சேர்ந்துகொள்கிறார். ரோமர், கலாத்தியர், எபேசியர், தீமோத் தேயுவுக்கு எழுதிய இரு நிருபங்கள், மற்றும் தீத்துவுக்கு எழுதிய நிருபங்களில் சகோதரரை பவுல் மாத்திரம் தான் வாழ்த்தினார். 2 கொரிந்தியர், பிலிப்பியர், கொலோசேயர், மற்றும் பிலேமோன் ஆகிய நிருபங்களில் பவுலின் வாழ்த்துதலில் தீமோத்தேயுவின் பெயரும் காணப்படுகிறது. தெசலோனிக்கேயருக்கு எழுதியுள்ள இரு நிருபங்களிலும் சீலாவும் தீமோத்தேயுவும் தன் உடன் இருப்பதாக அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். 1 கொரிந்தியரில் மாத்திரம் தான் பவுல் சொஸ்தெனேயும் சேர்ந்து இருந்தார்.

சொஸ்தெனே என்ற பெயர் கிரேக்கர்களுக்குக்கூட சற்று

அறிமுகமில்லாத பெயர். புதிய ஏற்பாட்டில் இங்கும் மற்றும் அப்போஸ்தலர் 18:17லும் மாத்திரம் இப்பெயர் காணப்படுகிறது. கொரிந்தியருக்கு வாழ்த்துதல் சொன்ன சொஸ்தெனேயும், தலைவர் (முதன்மை ஆட்சியர்) KJVபடி "ஜெப ஆலயத்தலைவனாக" அப்போஸ்தலர் 18:17ல்? கொரிந்துவில் கல்லியோனின் நியாயாஸ்தலத்திற்கு முன்பாக அடிபட்டவனும் ஒரே நபர் தானோ என்ற கேள்வி எழுகிறது. அப்படியென்றால் கொரிந்திய சொஸ்தெனே எபேசுவில் என்ன செய்து கொண்டிருந்தார்? எபேசுவில் பவுல் இருந்த பொழுது கொரிந்து சபையின் கேள்விகளைக் கொண்டு வந்த பிரதிநிதியாகவும் தெளிவாகத் தோன்றவில்லை (1 கொரி. 16:17). அக்கடிதத்தில் அவர் பெயரும் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை இருவரும் வெவ்வேறு ஆட்களாக இருக்கலாம்; இவ்வாறு இருக்கும் பொழுது, எபேசுவிலுள்ள கிறிஸ்தவர்கள் அனைவருக்குள்ளும் பவுலுடன் சேர்ந்து சொஸ்தெனேயும் வாழ்த்துக்கூறியது ஏன் என்ற கேள்வி நமக்கு எழுகிறது.

நமக்கு இதைப்பற்றிய காரணம் தெரியாத நிலையில் கொரிந்துவில் இருந்த சொஸ்தெனே (அப். 18:17) எபேசுவுக்கு புலம் பெயர்ந்திருக்கலாம் என்று நாம் தீர்மானிக்கலாம். சொஸ்தெனே, கொரிந்திய சமுதாயத்தில் ஓர் பிரசித்தி பெற்ற மனிதனாக இருந்திருக்கலாம். இவனுக்கு முன்னிருந்த ஜெபஆலயத் தலைவனாகிய கிறிஸ்பு இயேசுவே கிறிஸ்து என்று அறிக்கை யிட்டதினால், கொரிந்திய யூதர்களுக்கு ஜெப ஆலயத்தலைவன் இல்லாமல் போயிற்று (அப். 18:8). சொஸ்தெனே முன்னுக்கு வந்தான். ரோம நியாய ஸ்தலத்தின் முன் யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே உள்ள குழப்பத்தை எடுத்துரைத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. கிறிஸ்தவர்களும், யூதர்களும் ஒரே வகையானவர்கள் என்று அதிகாரிகள் நினைக்கக் கூடாது என்றும் கிறிஸ்தவர்கள் குழப்பத்தை உண்டு பண்ணுகிறவர்கள் என்றும் உலகத்தைக் கலக்குகிறவர்கள் என்றும், அவர்களுக்கு ரோமச்சட்டத்தின் படி யூதர்களுக்குக் கொடுக்கும் தகுதியையோ பாதுகாப்பையோ கொடுக்கக்கூடாது என்றும் கூறினான். கிறிஸ்தவர்கள்; யூதரையும், கிரேக்கரையும் "வேதப் பிரமாணத்திற்கு விகற்பமாய் ஒரே தேவனை வணங்க வேண்டும்." என்று வற்புறுத்தப் பிரயாசப்படுகிறார்கள் என்றும் கூறினான் (அப். 18:13) "யூதர்களாகிய நாங்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டோம். அவர்கள் எங்களைச் சேர்ந்தவர்கள் அல்ல, ரோமர்களாகிய நீங்கள் வேறு ஏதோ வேற்றுமத உறுப்பினர்கள் போல, உங்கள் விருப்பப்படி அவர்களை நடத்துகிறீர்கள்." என்று சொஸ்தெனே அதன் சாராம்சத்தை எடுத்துரைத்தான்.

கல்லியோனின் நியாயத்தீர்ப்பு, சொஸ்தெனே நினைத்தது போல நடக்கவில்லை. தீர்ப்பாயம் ஏன் இவ்வாறு முடிவெடுத்து என்று

அப்போஸ்தல நடபடிக்கை தெளிவான காரணங்களைக் கூறவில்லை. ஜெபஆலயத்தலைவனை பிடித்து அடித்தார்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வேளையாக அடித்திருக்கலாம். எந்த விதமான விருப்பு வெறுப்புமின்றி இருந்த அந்த ரோம அதிபதியின் கண்முன் தான் அவன் அடிவாங்கியிருப்பான். ரோமர்கள் முந்திய காலத்திலிருந்தே யூதர்களும், கிறிஸ்தவர்களும் ஒரே தேவனை வணங்குகிறவர்கள் என்ற எண்ணத்தில் இருந்தபடியால், கடந்தகால சட்ட ஒழுங்கின்படியே கல்லியோன் இவ்வித தீர்ப்பை வழங்கியிருக்கலாம். இவைகளில் "ஒன்றையும் குறித்து கல்லியோன் கவலைப்படவில்லை" என்று அப்போஸ்தலர் 18:17 கூறுகிறது.

கல்லியோனின் முன் இவ்வாறு பலமாக அடி வாங்கிய பின், கொரிந்துவில் சொஸ்தெனேவுக்கு இருந்த நன்மதிப்பை அவன் இழந்திருக்கலாம். அதன் விளைவாக அவன் எபேசுவுக்கு சென்றிருக்க வாய்ப்பு உண்டு. எபேசுவின் தன் சொந்த முயற்சியினால் பவுலை அங்கு சந்தித்திருக்கலாம். அப்போஸ் தலரின் போதனைகளைக் கேட்டு கிறிஸ்புவின் வழியைப் பின்பற்றி இருக்கலாம். சொஸ்தெனே கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். இவ்வாறு கொரிந்திய ஜெபஆலயத்தில் கிறிஸ்புவுக்கு அடுத்ததாக வந்த இரண்டாவது தலைவரும் கிறிஸ்துவையும் கிறிஸ்தவ நற்செய்தியையும் விசுவாசித்து ஏற்றுக் கொண்டான்.

சொஸ்தெனே, பவுலுடன் சேர்ந்து வாழ்த்துக் கூறினாலும், 1 கொரிந்தியரை எழுதியதில் அவருக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை எனத் தெள்ள தெளிவாக காணப்படுகிறது. அவர்கள் இருவர் பெயரும் இணைந்து காணப்படுவதன் காரணம் என்னவெனில், கொரிந்திய கிறிஸ்தவர்கள், மாபெரும் வெற்றிபெறும் ஓர் இயக்கத்தின் முன்னணி படை வீரர்களாக இருக்கிறார்கள் என்பதை அடையாளம் காட்டுவதற்காகவே (காண்க ரோமர் 1:8-10; கொலோ. 1:6; 1 பேதுரு 5:9). தேவனுடைய நோக்கத்தை எந்த வித எதிர்ப்பின் சக்தியும் தடுத்து நிறுத்த முடியாது. அவருடைய நோக்கங்கள் நிறைவேறும். பவுல், சொஸ்தெனேயின் பெயருக்கு முன்னால் **சகோதரனாகிய** என்று கூறப்பட்டிருப்பதன் காரணம் என்னவெனில் கொரிந்தியர்கள் தங்கள் பழைய பகைவனிடமிருந்து வாழ்த்துதலை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அவனுடைய மனமாற்றம் ஓர் வர வேற்கத்தக்க ஆச்சரிய நிகழ்வு.

**வசனம் 2. கொரிந்துவிலுள்ள . . . தேவனுடைய சபைக்கு** என்று பவுல் இந்த நிருபத்தில் குறிப்பிடுகிறார். "சபை" என்ற பதம் LXX[2] எடுத்தாளப்பட்டுள்ளது. மதசார்பற்ற உலகில், ஓர் நகரத்தின் குடிமக்கள் கூடி நகரத்திற்குத் தேவையான காரியங்களை தீர்மானித்து முடிவெடுப்பதற்காகக் கூடும் கூட்டத்தை "சபை" என்று பொதுவாக அழைப்பார்கள் (காண்க அப். 19:39ஐ) சபை என்ற பதத்திற்கான

அர்த்தத்தை மேற்கூறிய சபையினின்று வேறுபடுத்திப் பார்ப்பதற்கு இதை வாசிக்கும் கிரேக்கர்களுக்கு சற்று கடினமாகத் தோன்றும். விசுவாசிகள் கூடிவருவதை பவுல் “சபை” என்று ஓர் புரிதலின் அடிப்படையில் தான் அவ்வாறு அழைக்கிறார். சபை வேறு எவ்விதமாக இருந்தாலும், செயல்பட்டாலும் அது கூடி வந்தது. சமுதாய வாழ்க்கை என்பது அவர்கள் கூடி வந்ததால் ஆதரிக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் தேவனுடைய சமூகத்தின் முன் கூடிவந்து அவரைத் துதித்தார்கள். ஒருவரை ஒருவர் ஆதரிக்கவும், பொதுவான நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாக இருக்கவும், உற்சாகப்படுத்தவும் சபை கூடி வந்தார்கள் (எபி. 10:23-25).

தங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்களோ அதை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் விசுவாச அறிக்கையும், பழக்கவழக்கங்களும் இருக்கும் என்று தன் கடிதத்தை வாசிப்பவர்களின் தன்மையைப்பற்றி பவுல் நன்கு அறிந்திருந்தார். அவர்கள் தேவனுடைய சபை அவர்கள் பவுலைப்போல கிறிஸ்துவுக்குள் **பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்**. தேவன் அம்மக்களை தம் நாமம் தரிக்கபடுவதற்காக அழைக்கப்பட்டவர்களானதால் அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். “ஓர் குறிப்பிட்ட நற்பண்புகளை பெற்றுக்கொண்டதால் பரிசுத்தமாக்கப்பட்டாயிற்று என்று அல்ல, ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஓர் குறிப்பிட்ட உறவின் அடிப்படையில்தான் பரிசுத்தமாதல் உண் டாகிறது.”[3] பரிசுத்தமாக்கப்படுதல் என்பது பரிசுத்தமாயிருத்தல். பவுல் உபயோகிக்கும் இந்த பதம் விளக்க உரைக்கும் மேலானது என்ன விதத்தில் தேவன் அவர்களை உருவாக்கினாரோ அவ்வண்ணமாகவே இருக்க வேண்டும் என்று கிறிஸ்தவர்களுக்கு பவுல் சவால் விடுகிறார். இவ்வுலகத்தில் அவர்களுடைய வாழ்க்கை பரிசுத்தத்தை பிரதிபலித்துக்காட்ட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டதோ அதன்படி வாழ வேண்டுமே தவிர அதற்கு மாறாக அல்ல. கிறிஸ்துவின் சரீரத்திற்கு அத்தியாவசியமான ஒருமைபாட்டைக் குறித்து மிகவும் ஆணித்தரமாக இந்நிருபத்தில் பவுல் கூர ஆரம்பித்து விட்டார். சபை ஒரே சரீரமாக இருக்க வேண்டும் என்பதற்கு மாறாக கொரிந்து சபையில் காணப்படும் பிரிவினைகள் பலர் முன்னிலையில் பெருத்த அவமானத்தை ஏற்படுத்தும்.

1 கொரிந்தியரில், கொரிந்து சபையில் காணப்பட்ட பிரச்சனைகளும், அதைச் சார்ந்தவைகளும் குறிப்பாக அச்சபைக்காகக் கூறப்பட்டிருந்தாலும், உலகளாவிய ஐக்கியத்தில் அவர்களுடைய சமுதாயமும் கலந்துள்ளது என்று கொரிந்து கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்வது மிகவும் அவசியம். கொரிந்து சபையோ, எபேசு சபையோ அல்லது வேறு ஓர் நகரத்தில் இருக்கும் சபையாக இருந்தாலும்,

அங்குள்ள விசுவாசிகள் அனைவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தையே கும்பிடுகிறார்கள். அவர் அவர்களுடைய தேவன் மாத்திரம் அல்ல அவர் நம்முடைய தேவன். அனைவரும் தேவனுடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தின் கீழ் அழைக்கப்பட்டு, இணைந்துள்ளார்கள். காலத்தையும், இடத்தையும் கடந்து இரட்சிப்பின் செய்தியை அறி விக்கும் ஊழியப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர வேண்டும், அனைத்து இடங்களிலும்முள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் இயேசு கிறிஸ்துவே "அவர்கள் தேவனாக" இருப்பது போல அவர் "நம்முடைய தேவன்."

**வசனம் 3.** கொரிந்திய சபைக்கு அவர் எழுதியுள்ள வாழ்த்துதலில் ஜெபத்துடன், அன்புடன் கூடிய நல்லெண்ணமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கிரேக்கர் எழுதும் கடிதத்திற்கும் ஒத்திருக்கிறது. **கிருபையும் சமாதானமும்** உண்டாவதாக என்று எழுதியுள்ளார். இவ்வார்த்தைகளை லேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அது வெறும் பெயரளவிற்குக் கூறப்பட்ட வாழ்த்துதலும் அல்ல. விசுவாசம் பவுலையும் கொரிந்து சபையையும் ஒன்றாக இணைத்தது. நம் **பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும்** அவர்களை ஒன்றாக இணைத்ததால் அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் வாழ்ந்த அவிசுவாசக்கூட்டங்களிலிருந்து தேவன் அவர்களை வேறுபிரித்து எல்லைகளை உருவாக்கினார். சமாதானமும், கிருபையும் தங்களுக்கே உரியது என்று கொரிந்திய கிறிஸ்தவர்கள் அறிந்திருந்தார்கள்.

தேவனாகிய பிதாவின் தன்மையும், இயேசு கிறிஸ்துவின் தேவத்துவமும் தான் பவுலின் மையக்கருத்தாகும். கிரேக்க இலக்கியத்தில் சூஸ் ஒரு சில சமயங்களிலாவது தெய்வீக தந்தையாக கருதப்பட்டான். மானுட குடும்பத்தைப் போலல்லாது அவனுடைய பிதாவின் தன்மை ஒலிம்பியன் என்ற பல தெய்வ வழிபாட்டைப் பற்றியதாக இருந்தது. பழைய ஏற்பாட்டிலும் கூட தேவனின் பிதாதத்துவம் முற்றிலும் இல்லை என்று கூறுவதற்கு இல்லாது எங்கும் பரவலாக வியாபித்திருக்கும் கருப்பொருளாகக் காணப்பட்டது (காண்க ஓசியா 11:1-4). பிதாதத்துவத்தை (பிதாவின் தன்மை) விசுவாசிகள் மீதும் மக்கள் மீதும் தேவன் வைத்துள்ள அன்புக்கு, மக்கள் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதையும் விளங்கிக் கொள்ள இது ஓர் பயனுள்ள உவமேயமாகக் காணப்படுகிறது என்பதை இயேசுவும் பவுலும் நன்கு அறிந்திருந்தார்கள். பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசுவும் தேவத்துவத்தில் சம அந்தஸ்து உடையவர்கள். கிறிஸ்தவர்கள், அவர்கள் (தேவனின்) இருமைத் (இரு தன்மை) தன்மையிலும் அவர்கள் (தேவனின்) ஒருமைத் தன்மையிலும் கிருபையையும், சமாதானத்தையும் கண்டு கொண்டார்கள்.

## தேவனால் எல்லாவற்றிலும் சம்பூரணம் (1:4-9)

அணியிலக்கணத்துடன் பேசும் திறனைப் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் கற்றுக்கொண்டு தங்களுக்கும், தங்கள் சொற்பொழிவைக் கேட்போருக்கும் இடையிலான இடைவெளியை நீக்கும் வகையில் பேசத் துவங்குவதற்கு கற்றுக்கொள்ளும் பள்ளிகள் கிரேக்க-ரோம நாடுகளில் இருந்தன. கல்விமானாக இருந்த பவுல் கூட, மக்களுடன் தொடர்பு கொள்ள இப்படிப்பட்ட அணியிலக்கணத்துடன் பேசும் திறனை இக்கல்வி சாலையில் கற்றுக்கொண்டார் பொதுவான ஓர் வாழ்த்துதலுக்குப்பின் தேவன் கொரிந்திய சபைக்கு அளித்துள்ள ஆசீர்வாதங்களை அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார்.

**4கிறிஸ்துவைப்பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்
பட்டபடியே, 5நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா
உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூரண
முள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால், 6அவர் மூலமாய் உங்களுக்கு
அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து
எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். 7அப்படியே நீங்கள்
யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.
8நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள்
குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர்
உங்களை ஸ்திரப்படுத்துவார். 9தம்முடைய குமாரனும் நம்முடைய
கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு
உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.**

இந்த வார்த்தைகள் உபசார வார்த்தைகள்: தேவன் கொரிந்தியரைத் தெரிந்தெடுத்திருக்கிறார். ஆனால் அவர்கள் தேவனுடைய கிருபையை வெறுமனே பெற்றுக் கொண்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அவருக்காக ஓர் தீர்மானத்தையும் எடுத்தார்கள். எப்பொழுதும் போல, அந்த நிருபம் முழுவதிலும் தொடர்ந்து, எதற்காக தேவன் இவ்வாறு அவர்களை அழைத்திருக்கிறார் என்று அந்த நிருபத்தை வாசிப்பவர்களுக்கு விளக்குகிறார். அவர்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றவர்களாயிருந்தும், இன்னும், தேவனுடைய பிதாதத்துவத்தையும், இயேசுவின் கர்த்தத்துவத்தையும் அறிக்கையிடுகிறதில் இன்னும் தங்கள் தீர்மானத்தை முழுமையாக எடுக்கவில்லை. அவர்கள் கடந்து செல்லவேண்டிய விசுவாசப்பயணம் அவர்கள் முன் இருக்கிறது.

**வசனம் 4.** பொதுவாக பவுல் தன் நிருபங்களை ஸ்தோத்திர ஜெபத்துடன் தான் ஆரம்பிப்பார் (ரோமர் 1:8; எபே. 1:6; பிலி. 1:3; கொலோ. 1:3; 1 தெச. 1:2; 2:13; 2 தெச. 1:3) கொரிந்திய விசுவாசிகளுக்கு தேவன் பாராட்டிய கிருபைகட்காகவும்,

அவர்களுடைய அறிக்கைக்காகவும் மிகவும் நன்றியுடன் இருந்தார். சபைக்குள்ளே நிலவிய குழப்பங்களைக் கருத்தில் கொண்டு, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத் தரிக்கிறேன் என்று பவுல் எழுதியிருப்பது மெச்சிக்கொள்ளப் படத்தக்கது. இந்த ஜெபம் வழக்கம் போல் எழுதப்பட்ட ஒன்று என்று விட்டுவிட முடியாது, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தேவகிருபை, மனிதன் வீழ்ச்சி யடைந்த போதிலும், அந்தக்கிருபை நமக்குள் செயல்படும். முதிர்ச்சி அடையாத சபைகளிலும் கூட தேவன் பாவிகளுக்கு நீதி பாராட்டுகிறார். கொரிந்திய விசுவாசிகள் சிவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்ததுடன். தேவன் இரட்சிப்படைந்த சரீரமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாலும் பவுல் தேவனை ஸ்தோத்தரித்தார். கிறிஸ்து மக்களை மீட்பதற்காக செய்து முடித்த இரட்சிப்பின் பணியை செய்யவிடாது அறிவீனம், பெருமை போன்றவைகள் கொரிந்து சபையில் தலைதூக்கி, பவுலை திசைதிருப்புவதை பவுல் ஒரு சிறிதும் அனுமதிக்கமாட்டார்.

இரண்டு குறுகிய வரிகளில் (1:3, 4) பொதுவாக பயன்படுத்தப்படும் மொழியாக்கம் செய்யப்பட்ட “கிருபை” (χάρις, *charis*) என்ற பதத்தை இருமுறை பயன்படுத்துகிறார். “அன்பு கூருதல்,” “தயை” ஆகிய அர்த்தத்தைக் கொண்டுள்ள “கிருபை” என்ற வார்த்தையை எங்கும் பயன்படுத்துவதற்கு பவுல் ஒரு சிறிதும் தயங்கவில்லை (1:3). ஆனால் 4வது வசனத்தில் அதன் அர்த்தத்தை மற்றோர் நிலைக்கு எடுத்துச் செல்கிறார். கிறிஸ்தவர்களுக்குக் “கிருபை” என்பது, கிறிஸ்தவர்களுக்கே சரிதானா மிக நுணுக்கமான, அர்த்தத்தையுடையதா தேவன் பதில் உபசரத்தை எதிர்பார்க்காத, இலவசமான, இரக்கமுள்ள பரிசாக ... கிறிஸ்துவுக்குள் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார். இந்நிரு பத்தில் பவுல், கொரிந்திய சபையின் சகோதர, சகோதரிகளுடன் ஸ்தோத்திரத்தோடு தேவனுடைய கிருபையை பகிர்ந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்டே அவர்களை கடிந்து கொண்டு, சீர்திருத்தம் செய்கிறார் என்ற கண்ணோட்டத்தில் இந்நிருபத்தை வாசிக்க வேண்டும். எந்தவிதமான குழப்பங்கள் நேரடியாக அவர்களைத்தாக்கினாலும், கிறிஸ்துவுக்குள் அவர்கள் பகிர்ந்து கொள்ளும் ஆசீர்வாதங்கள் தேவனிடத்திலிருந்து வரும் ஈவு என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்புகிறார். அவர்கள் தேவனுடைய கிருபையில் வளரும்பொழுது, அவர்களுக்குள் உள்ள ஆவிக்கு எதிராக போராடும் பிரிவினைகள், பாவங்களிலிருந்து விலகி அவற்றை மேற்கொள்ள முடியும் என்பது அவருடைய அசையாத நம்பிக்கை.

**வசனம் 5. எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும்** என்று அப்போஸ்தலர் இங்கு கூறுவது, அந்த நிருபத்தை அவர்கள் திறக்கும் பொழுது அது மகாப்பெரிய காரியங்களை வெளிப்படுத்தும். சில

கொரிந்திய விசுவாசிகள் தாங்கள் ஞானத்தில் தேறினவர்கள் என்று வெளிப்படையாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் ஞானம் என்று நினைத்துக் கொண்டது பவுல் ஞானம் என்று அறிந்து கொண்டதற்கு முற்றிலும் மாறுபட்டுக் காணப்பட்டது (3:18-20). இந்த நிருபத்தை வாசித்தவர்கள் கிறிஸ்துவுக்குள் சம்பூரணமடைந்துள்ள தற்காலப் பவுல் தேவனை ஸ்தோத்தரித்தார், தேவன் கொடுக்க நினைத்த அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் பங்குள்ளவர்களாயும் இருந்தார்கள். "எல்லா உபதேசத்திற்கும் எல்லா அறிவிற்கும்" இயேசுவே மூலகாரணர் என்று பவுல் கூறுகிறார். ஒரே சமயத்தில் அவர்களை பவுல் அப்போஸ்தலன் மிகவும் திறமையுடன் புகழவும், கடிந்து கொள்ளவும் அறிந்திருந்தார். உலக அரங்கில் கொரிந்தியரின் உபதேசமும் கல்வி அறிவும் மிகவும் புகழ்ச்சியாக காணப்பட்ட நிலையில் பவுலின் சொற்கள் ஓர் வஞ்சப்புகழ்ச்சி அணியாகவே காணப்படுகிறது.

கொரிந்தியர்களில் சிலர், அக்காலத்தில் பழக்கத்திலிருந்த அணியிலக்கணங்களுடனும், நாவன்மையுடனும் பேசும் திறமைக்கு மிக அதிகமான முக்கியத்துவம் கொடுத்திருந்தனர் என்று புவுல் எழுதியுள்ள நிருபம் வெளிப்படையாகக் காட்டுகிறது. தேவனுடைய காரியத்திற்கும் தேவனுடைய ஊழியத்திற்கும் இந்த பேச்சுத்திறமை உதவியாக இருக்கலாம், அல்லது உதவாமலும் இருக்கலாம், என்று பவுல் அறிந்திருந்தார். கொரிந்தியர்கள் தங்கள் ஞானத்தைப் பற்றி தங்களை தாங்களே பெருமையாக எண்ணிக் கொண்டிருந்த பொழுது, பவுல் அதை ஒரு பொருட்டென்று எண்ணவில்லை. தேவனைப் பற்றியும் அவரது வெளிப்பாடுகளைப் பற்றியும், மீட்பைப் பற்றியும், அழியாத நித்திய ஜீவனைப்பற்றியும், அறிந்து கொள்ளவும், உபதேசிக்கவும், கிறிஸ்துவுக்குள் அவர்கள் ஆசீர்வதிக் கப்பட்டிருக்கிறார்கள். அணி இலக்கணங்களுடன் நாவண்மையுடன் சிறந்த சொற்றொடர்களை அமைத்து பேசும் திறமை பெற்றிருந்ததற்கு தேவனுக்கு மகிமையைக் கொடுப்பதற்கு பதிலாக தங்களைத் தாங்களே ஞானவான்கள் என்று எண்ணிக் கொண்டதுடன் நாவன்மையுடன் பேசும் திறன் தங்களுடனேயே முடிவடையும் என்றும் சாதுரியமாகப் பேசிக் கொண்டார்கள்.

அப்போஸ்தலர் எந்த ஒரு தருணத்திலும், தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ளும் விதத்திலும், பிரிவினையை உவமானப்படுத்தியும் உபதேசித்ததும் இல்லை. அப்போஸ்தலரும், கொரிந்திய சபை சகோதரர்களும், அறிவையும், தெளிவாக சத்தியத்தை அறிவித்தலையும், ஒரு விதமாகவே மதித்தனர். உபதேசிப்பதையும், புரிந்து கொள்ளுதலையும் பவுல் எந்த அளவு கோல் கொண்டு தீர்மானிக்கிறாரோ அது அவர்களின் தீர்மானத்தைப் போல் இல்லாது வேறுபட்டுக் காணப்பட்டது. இந்த சகோதரர்கள்

ஐசுவரியவான்கள்தான். ஆனால் கிறிஸ்துவுக்குள் அவர்கள் பகிர்ந்து கொண்ட ஈவு, தங்களைச் சுற்றியுள்ள மக்களின் மனோநிலையை உதாசீனப்படுத்துவதை அவர்கள் உணரவில்லை.

**வசனம் 6.** கொரிந்தியருக்கு பவுலும், மற்றவர்களும் கொடுத்த சாட்சியினாலே கிறிஸ்துவைப் பற்றிய அறிவு கிடைத்தது. இயேசு தமது வார்த்தையினாலும் செய்கையினாலும் தம்மை கிறிஸ்துவாக வெளிப்படுத்தினார் என்பதில் அவர்கள் உறுதியாயிருந்தார்கள் (15:1-4). நசரேயனாகிய இயேசு தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே பலமாய் தேவகுமாரனென்று நிரூபிக்கப்பட்டார் (ரோமர் 1:4) கொரிந்தியர்கள் அறிந்த சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு அப்போஸ்தலர், அவர்கள் கவனத்தை ஈர்த்தார்கள். கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி அவர்களுக்குள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. பவுலுக்கும், அவர் நிருபத்தை வாசிக்கும் கொரிந்தியருக்கும் தவிர, சூழ்நிலைகளை அறியாத நிலையில் அக்கடிதத்தை வாசிக்கும் பிற மக்களுக்கு அப்போஸ்தலத்துவ சாட்சி எவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது என்று ஆச்சரியப்பட நேரிடும். "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் ... உங்களுக்குள் நடப்பிக்கப்பட்டதே" என்று பின்னர் உறுதிப்படுத்தினார் (2 கொரி. 12:12). பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்தபொழுது, சில கொரிந்தியர்கள் மீது அவர் தம் கைகளை வைத்த பொழுது பரிசுத்தஆவியானவர் வல்லமையாய் அவர் மீது இறங்கினார். இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றவர்கள் அவரவர் தீர்மானித்தபடி அற்புதங்களைச் செய்யமுடியும் (1 கொரி. 12:7-10).

சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட பொழுது, உண்மையாகவே அது அற்புதங்களால் உறுதிப்படுத்தப்பட்டது, ஆனால் இக்காரியத்தில் பவுல் தன் மனதில் வேறு எண்ணம் கொண்டிருந்திருக்கலாம். ஒரு வேளை கொரிந்திய கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏற்பட்ட வேறுபட்ட ஜீவியத்தை அல்லது அவர் மீட்கப்பட்ட மக்களாக அவர்கள் அனுபவித்த மகிழ்ச்சியை சுட்டிக் காட்டியிருக்கலாம். அவர்களின் (இரட்சிக்கப்பட்ட) மாறுபட்ட ஜீவியம் அவரின் போதனையில் உள்ள சத்தியத்தை உறுதிப்படுத்தியது. இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், நம்பகரமற்றதாகவும், புரிந்துகொள்ளக்கூடியதாகவும் ஒரு வேளை இருந்திருக்கலாம். "உறுதிப்படுத்தப்பட்ட" என்ற வினைச்சொல் βεβαιόω (*bebaioō*), என்ற பதத்திலிருந்து மொழி பெயர்க்கப் பட்டிருந்ததால், முடவன் குணமடைந்த, அல்லது குருடன் மீண்டும் பார்வையை பெற்ற காலத்தை கொரிந்தியர்கள் மீண்டும் அதை சிந்திக்க வழிவகுத்திருக்கலாம். எபிரெய நிருபத்தை எழுதியவரும் "உறுதிப்படுத்தப்பட்ட" என்ற வினைச்சொல்லை சத்தியத்திற்கு சாட்சியாக இணைந்து நிகழ்ந்த "அடையாளங்களினாலும்,

அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் பரிசுத்த ஆவியின் வரங்களினாலும்" உறுதிப்படுத்தப்பட்டது என்று அர்த்தத்தில் எழுதியிருக்கிறார் (எபி. 2:3, 4).

**வசனம் 7.** தன்னுடைய நிருபத்தை வாசிப்பவர்கள் எவ்வளவு தூரத்திற்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவித்திருக்கிறார்கள் என்று உறுதிபட அறிய அதிகம் பிரயாசப்பட்டார். அவர்கள் தேவனுடைய கிருபைக்குப் பங்காளிகளானதால், அவர்கள் எந்த ஒரு வரங்களிலும் குறைவு பட்டுக் காணப்படவில்லை. உபதேசத்திலும் அறிவிலும் மிகவும் தேறினவர்களாயிருந்தார்கள். கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி அவர்களில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அற்பத்தனம், பிரிவினைகள், குழப்பங்கள், உலகப்பிரகாரமான வாழ்க்கை சபையில் பிரத்தியட்சமாய் காணப்பட்ட பொழுது அவர்களுக்கு இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் கொடுக்கப்பட்டது எப்படி? இப்படிப்பட்ட கடினமான கேள்விகளைக் கேட்குமுன், கொரிந்திய சபையில் தேவனுடைய கிரியையின் மீதுள்ள நம்பிக்கையை முதலாவது உறுதி செய்து கொள்ள பவுல் விரும்பினார். இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் ஒன்றும் அவர்களுடைய சுயஞானம், வல்லமை, நற்பண்புகளாய் தோன்றியவை அல்ல என்பதை அவர்கள் அறிந்து கொள்ள விரும்பினார். தகாதமுறையில் மனுஷனுடைய ஞானத்திலும் வல்லமையிலும் நம்பிக்கை வைத்திருப்பதற்கான காரணத்தை விளக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் தக்க சமயத்தில் அவர்களிடம் கேட்டார் (1 கொரி. 3:18-20).

கொரிந்தியர் "எந்தவித வரத்திலும் குறைவில்லாதிருந்த நிலையில்" வெவ்வேறு வரங்களைப் பற்றியதும் தன்மைகளைப் பற்றியதுமான கலந்தாலோசனை நடந்தது. "வரம்" என்ற பதத்தின் மொழியாக்கம் χάρισμα (*charisma*) என்ற பதத்திலிருந்து செய்யப்பட்டது. இந்த வார்த்தை பவுலின் நிருபங்களில் பதினாறு முறையும், 1 பேதுரு 4:10ல் ஒரு முறையும் வருகிறது. பவுல் ரோமாபுரிக்கு வந்த பொழுது அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு சில ஆவிக்குரிய வரங்களைக் கொடுக்கும்படிக்கு விரும்பினார் (ரோமர் 1:11). 1 கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் கிரேக்க மொழியில் வரம் என்ற வார்த்தை ஐந்து முறை வருகிறது. கொரிந்தியர்கள் வெவ்வேறு அற்புதமான வரங்களை அனுபவித்தாலும் அதைக் கொடுத்த "ஆவியானவர் ஒருவரே" (12:4). இப்படிப்பட்ட சந்தர்ப் பங்களில் "காரிஸ்மா" என்ற பதம் தனித்தன்மை வாய்ந்தது, இயற்கைக்கு அப்பாற்பட்ட (தெய்வீக) நன்கொடை என்பதை குறிக்கிறது என்பது தெளிவாகிறது. ஆனால் பவுல் சில சமயங்களில் இந்த வார்த்தையை எவ்வித வெளிப்படைத் தன்மையின்றி அற்புதங்களுக்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடுகிறார். உதாரணமாக தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே என்று ரோமர் 11:29ல் கூறுகிறார். 1 கொரிந்தியர்

1:7ல் தெய்வீக வரங்களைப்பற்றி பவுல் தன் மனதில் இரண்டு வித மான எண்ணங்களை உடையவராகக் காணப்பட்டார் என்று தெரிகிறது. முதலாவதாக, கொரிந்தியர் பெற்ற பரிபூரண ஆசீர்வாதங்கள், அவர்களின் விசுவாசத்தினால் தான் என்று இந்த இடத்தில் உறுதிப்படக் கூறுகிறார். இந்த பூரணம் என்பது அற்புதங்களையும் உள்ளடக்கியது. இரண்டாவதாக கொரிந்தியர் கள் அற்புதங்களுக்கு தவறான வழியில் முக்கியத்துவம் கொடுத் தார்கள் (12:29-31). 1 கொரிந்தியர் 1:7ல் குறிப்பிட்டுள்ள பிரச்சனைக்கு 1 கொரிந்தியர் 12:29-31 பவுலின் ஓர் திருத்தமாக கருதப்படுகிறது.

கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களில் எவ்விதக் குறைவும் இல்லை. தேவனுடைய திட்டத்தில் பெருமளவு பங்கு கொள்ளும் பொழுதுதான் அவை முக்கியத்துவம் பெறுகின்றன. பவுல் தன் நிருபத்தை வாசிப்பவர்களுக்கு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாட்டின் மீது கூடுதலான தோற்றத்திற்கு அவர்கள் கவனத்தை ஈர்க்கிறார். கொரிந்தியர்கள் ஓர் நிறைவான வாழ்வை எதிர் நோக்கிக் காத்திருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு மறைமுகமாக நினைவூட்டினார். ஒருவருடைய வாழ்க்கை தேவனுடைய வருகையை எதிர் நோக்கி யிருக்கும் பொழுது வரங்களும், மதிப்புகளும் வேறு விதமான தன்மையைப்பெறும் எவ்விதமான ஆவிக்குரிய வரங்களையும், அறிவையும் கொரிந்தியர்கள் அனுபவித்தாலும், "கிறிஸ்துவின் வருகை," "தேவனுடைய வெளிப்படுத்தல்," தான் அவர்களுடைய ஆவலுடன் கூடிய எதிர்பார்ப்பு. கிறிஸ்துவின் சபை எப்பொழுதும் தொடுவானத்தை நோக்கியே தங்கள் கண்களை பதியவைத்திருக்க வேண்டும், ஏனென்றால் "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது" (1 பேதுரு 4:7).

கிறிஸ்தவர்களாகிய நமக்கு, தேவனுடைய கிருபையால், இறுதிவரை நாம் விடாமுயற்சி செய்ய முடியும் என்ற நிச்சயம் நமக்குள்ளது. ஆனால் விடாமுயற்சி முன்னரே முடிவுபெற்ற காரியமல்ல. பிந்தைய காலத்தில் தானே "ஆகாதவனாய்" போகாத வனாவதற்குச் சாத்தியக்கூறுகள் என்று தீர்மானித்தார் (1 கொரி. 9:26, 27; KJV). தேவன்மீது தங்கள் விசுவாசத்தை வைத்திருக் கிறவர்களை எந்த விதமான உலகப் பிரகாரமான வல்லமை தேவனுடைய அன்பை விட்டு பிரிக்க முடியாது (ரோமர் 8:38, 39) கிறிஸ்து நம்முடைய உதவியாளனும், நண்பனுமானவர். தேவன் தம்முடையவர்களை மன்னித்து தம்முடன் சேர்த்துக் கொள்வார்.

**வசனம் 8.** 1 கொரிந்தியர் 1:7ல் நாம் வாசிக்கும் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுதலை" என்பதை வேறுவிதமாகக் கூறினால் 1 கொரிந்தியர் 1:8ல் **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே** என்று கூறலாம். பூமி நிலைத்திருப்பதற்கும்,

காலம் என்பவற்றின் முடிவில், கர்த்தரின் வருகையை நோக்கி வரலாறு என்னும் காலச்சக்கரம் முன்னோக்கி சுழன்று கொண்டிருக்கிறது. ஆனால் “காலம்” அதிருப்தியில் உளலும்வரை மனுக்குலம் எந்தவிதக் குழப்பமின்றி முன்னேறிச் செல்லும்.

பழைய ஏற்பாட்டில் “கர்த்தருடைய நாள்” என்பது ஓர் முக்கியமான கருப்பொருள். தீர்க்கதரிசிகள் அதை கையாண்ட முறையின் அடிப்படையில், புதிய ஏற்பாட்டில் அதன் அர்த்தத்தை நாம் விளங்கிக் கொள்ள உதவுகிறது. “கர்த்தருடைய நாள்” என்பது எந்த ஒரு நாளில் கர்த்தர் தம் மக்களை இரட்சிக்கவோ அல்லது தண்டிக்கவோ வல்லமையாய் செயல்படுகிறாரோ அந்த நாளைக் குறிக்கிறது. கர்த்தருடைய நாள் என்பது கர்த்தருடைய வருகையின் நாள் என்பதை புதிய ஏற்பாடு திட்டவட்டமாகக் கூறுகிறது. கர்த்தரின் வருகை நிச்சயமான ஒன்று என்பதை கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால் நாழிகையை அறியார்கள்; இரவிலே திருடன் வருகிறவிதமாய் கர்த்தருடைய வருகையிருக்கும் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது (மத். 24:36; காண்க 1 தெச. 5:2).

**வசனம் 9.** இரட்சிப்பின் நிச்சயம்: தேவன் உண்மையுள்ள வராயிருக்கிறார் என்பதன் அடிப்படையில் காணப்படுகிறது. உண்மையுள்ள ஒரே தேவன் கிரேக்கர்கள் தங்கள் கடவுளைப்பற்றி அறிந் துள்ளது போல, ஸ்திரத்தன்மையில்லாத கடவுளைப் போல அல்ல. **தேவன் உண்மையுள்ளவர்** அவர் தம் பிள்ளைகளண்டையில் துணையாக நிற்பார் 1 கொரிந்தியர் 1:9ல் காணப்படும் “அவருடைய குமாரனுடைய ஐக்கியம்” என்று கருத்தில் கொள்ளலாம். கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொண்டிருப்பது என்பது நாமனைவரும் கிறிஸ்துவோடு ஐக்கியம் கொண்டிருப் பதால்தான் (1 யோவான் 1:6, 7).

கிறிஸ்துவுக்குள் பவுலினுடைய சிந்தனைகள் ஆழமாக வேர் கொண்டிருந்ததால், அவர் அந்த நாமத்தை தொடர்ந்து பயன்படுத்தினார் என்பது தெளிவாகிறது. தம்முடைய நிருபத்தின் தொடக்க முதல், இறுதிவரை அவர் கிறிஸ்து இயேசுவை கொரிந்தியருக்கு முன் நிறுத்தினார். தன் சொந்த பலம் அல்லது ஞானத்தின் மீது ஒரு சிறிதும் சார்ந்திராமல் தேவனையே நோக்கியிருந்தார். அவருடைய ஒவ்வொரு செயலும், சிந்தனையும்; தன்னை அழிவினின்று மீட்டு நித்திய ஜீவனுக்கு அழைத்தவரின் மகிமைக்காகவே இருந்தது.

## திருச்சபையில் காணப்பட்ட பிரிவினைகளைக் குறித்ததான பவுலின் எச்சரிக்கை (1:10-17)

கொரிந்து சபை, அனுப்பிய பல கேள்விகளுக்கு பவுல் தன் நிருபத்தின் மூலம் விடையளித்தார். அந்த கேள்விகளுக்கு

விடையளிக்கும் முன் சரீரமாகிய சபையில் காணப்பட்ட பிரிவினைகளைப் பற்றி பேச விரும்பினார் (1 கொரி. 1:10-4:21). சமீபகாலத்தில் கொரிந்தியருடன் கொண்ட தொடர்பின் மூலமாக, அங்கு பிரிவினையால் ஏற்பட்ட பிரச்சனைதான் அவருடைய சிந்தனையை முற்றிலும் ஆட்கொண்டது. சபையில் நிலவிய சண்டைகளும், கருத்து வேறுபாடுகளும், சில சமயங்களில் அவருக்கு மிகுந்த வருத்தத்தை உண்டாக்கியது. பவுலுக்கு விசுவாச முள்ளவர்களாய் இருந்த சில கொரிந்திய கிறிஸ்தவர்கள் அதை தங்களுக்கு அளவுக்கு மீறிய பெருமையாகக் கருதினார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் காணப்பட வேண்டிய ஒருமைப்பாட்டை விட பவுல் சில காரியங்களை அதிக முக்கியமானதாகக் கருதினார் (எபே. 4:4-6). ஓர் குறிப்பிட்ட தரப்பினர் பவுலின் பெயரை தங்களுடன் இணைத்துக் கொண்டிருப்பது அவரை மிகவும் வேதனைகளுக்குள்ளாக்கியது. இன்றைய காலத்தில் சபைகளைக்கட்ட முயற்சிப்பவர்கள், சாட்சி பகர்வது போல புதிதான உருவான சபை மக்கள் அசாதாரணமாக பிரிவினைக்கு இடமளிப்பவர்களாகக் காணப்படச் செய்கின்றனர்.

கொரிந்து சபையில் பிரிவினை ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருந்திருக்கலாம். சகோதரர்கள் வெவ்வேறு ஆவிக்குரிய வரங்கள் உடையவர்களாக காணப்பட்ட பொழுது, அவர்களின் கிறிஸ்தவ விசுவாசத்திற்கும், அதை செயல்படுத்துவதற்குமான நம்பகரமான எழுத்து வடிவிலான விளக்கங்கள் அவர்களிடையே காணப் படவில்லை. புதிய ஏற்பாடு உருவாக்கப்படும் நிலையில்தான் இருந்தது. இரண்டாவதாக கொரிந்திய விசுவாசிகள் தங்களை சுயமாகச் சிந்திப்பவர்களாக வெளிக்காட்டிக் கொண்டனர். அவர்கள் புதிய கருத்துக்களைப் பேசுபவர்களையும், புதிய கருத்துக்களையும் ஆதரிப்பவர்களாகக் காணப்பட்டதால்தான், தங்கள் நண்பர்கள் அறிந்திராத, பவுல் கூறிய காரியங்களை ஏற்றுக்கொண்டு புதிய மதத்தை தழுவினார்கள். பவுலின் உபதேசத்தை எப்படி திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டார்களோ, அதே மனதுடன் அவருடைய உபதேசத்தைவிட்டு வழி விலகிச் செல்லும் மனோநிலை உடையவர்களாகவும் காணப்பட்டார்கள். மூன்றாவதாக, கொரிந்து பட்டணத்தில் பலவிதமான போதனைகளை போதிக்கும் போதகர்கள் அவர்களைச் சூழ இருந்தார்கள். கொரிந்தியர்கள் அக்காலதத்துவ சாஸ்திரிகளுக்கு பழக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். போதகர்களுக்கு விசுவாசமாக இருப்பதும் அல்லது கட்சியுடன் ஈடுபாடு கொண்டிருத்தலில் வரையறையின்றி தங்கள் நிலையில் மாறிக் கொண்டேயிருப்பது பொதுவாக அவர்களில் காணப்பட்டது. சபையில் பிரிவினை சக்திகள் தீவிரமாக செயல்பட்டது பவுலுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்காது. ஆனால் பிரிவினை உண்டாவதற்கு தான்

காரணம் என்று யாரும் அவரிடம் முறையிடுவதை அவர் விரும்பவில்லை.

## சகோதரரே ஏகமனதை உள்ளவர்களாயிருங்கள் (1:10)

**10சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

**வசனம் 10.** 1 கொரிந்தியர் 1:9ல் அவருடைய குமாரனுடனான ஐக்கியத்தை, அப்போஸ்தலர் குறிப்பிடுவது, 1:10ல் ஒரு மனதுடன் இருக்க வேண்டும் என்ற அமைதலான மாற்றத்திற்கு வேண்டுகோளாக இருந்தது. கிறிஸ்துவுடன் உள்ள ஐக்கியம் கிறிஸ்தவர்களை இணைக்கிறது; ஆனால் கொரிந்திய விசுவாசிகள் இந்த ஒருமனம் ஒற்றுமையை கண்டு கொள்ளாது, தங்கள் சுயவிருப்பத்தையே நாடினார்கள். இந்த நிருபங்களைப் போலவே பவுல் இங்கும் திறந்த மனதோடு பேசினார். இந்நிருபம் உணர்வுகளை வெளிக்காட்டாத, வெறும் போதனைக்காக எழுதிய நிருபம் அல்ல. கொரிந்தியருக்கெழுதிய நிருபத்தில் மனதுருக்கம், தயவு, ஏமாற்றம், கோபம் போன்ற உணர்வுகளின் வெளிப் பாட்டைக் காணலாம். 1 கொரிந்தியரில் மட்டும் **சகோதரரே** என்ற பன்மையில் உள்ள வார்த்தை இருபத்தேழு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. சபை சகோதரத்துவத்தில் ஒருவருக்கொருவரை விட்டு கொடுத்து சமாதானமாய் இருப்பது எப்படி சாத்தியமாகும்? கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் பிளவுகளையும், பிரிவினைகளையும் உண்டாக்கிக் கொண்டார்கள். அப்போஸ்தலர் மிகவும் சாந்தத்துடன் நிருபத்தை துவங்கினார். நடப்பு காரியங்களில் மாத்திரம் மன நிறைவுடன் இருக்கக்கூடாது என்று ஆலோசனை கூறினார். ஏக மனதும் ஏக சிந்தையும் உடையவர்களாய் ஒருவரோடொருவர் பின்னிப் பிணைந்து அவர்கள் இருக்க வேண்டும் என்று விரும்பினார். இது பவுலின் தனிப்பட்ட வேண்டுகோள் அல்ல, ஆனால் அது நமது **கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால்** ஏறெடுக்கப்பட்ட ஒன்று.

விசுவாசிகளுக்கிடையே பிரிவினைகள் வெவ்வேறு நிலைகளில் ஏற்படலாம், இவை ஒன்றும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதல்ல. சில சமயங்களில் தேவனுடைய பிள்ளைகளாக ஓர் தனிப்பட்ட சபை மக்கள் மற்றோர் சபைமக்களுடன் ஐக்கியம் கொள்ள மறுப்பு தெரிவிக்கிறார்கள். சூழ்நிலைகள் மாறுபடுகிறது. சில சமயங்களில் வேதத்திற்கு புறம்பான காரியங்களை ஓர் சபை மக்கள் கைக்கொண்டால் பிரிவினைகள் ஏற்படும். வேறு இடத்தில் ஆராதனை

செய்யும் உடன் கிறிஸ்தவர்களிடம், மற்றோர் சபை மக்கள் தங்கள் கருத்துக்களையும், முன்னுரிமைகளையும் அவர்கள் மீது திணிப்பதினாலும் பிரிவினைகள் ஏற்படுகின்றது.

சில பிரிவினைகள் சபை மக்களின் நிலைகளைத் தாண்டிச் செல்லாது. தம் நிருபத்தை வாசிப்பவர்கள், ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு ஏக மனதுடன் சீர் பொருந்தியிருக்க வேண்டும் என்று உற்சாகப்படுத்தும் பொழுது, கொரிந்து சபையில் நிலவிய உட் பூசல்களைத் தம் கருத்தில் கொண்டார். சபைக்குள் இருக்கும் பிரிவினைகள் தனிப்பட்ட நபர்களைப் பொறுத்தது. ஆனால் பெரிய சபைகளில் ஏற்படும் பிரச்சனைகள் போல, எந்த விதத்திலும் சபையை அழிப்பதில் குறைந்து காணப்படாது. கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கவும், மதிக்கவும், கனப்படுத்தவும் வேண்டும் என்று ஆலோசனை கூறுவதற்கு புதிய ஏற்பாட்டில் அதிக அளவு இடம் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது. சபை மக்கள் மத்தியில் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொண்டு தேவனை மகிமைப்படுத்த எடுக்கும் முயற்சி என்பது எந்தவித விசுவாச சோதனைக்கும் இல்லாத அதிகமான வலுக்கட்டாயமாகச் செய்யப்படும் முயற்சி ஆகும்.

## உங்கள் பிரிவினைகள் அடிப்படையற்றவை (1:11-16)

**11ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள்
உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து
எனக்கு அறிவிக்கப்பட்டது. 12உங்களில் சிலர்: நான் பவுலைச்
சேர்ந்தவனென்றும், நான் அப்பல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான்
கேபாவைச் சேர்ந்தவரென்றும், நான் கிறிஸ்துவைச்
சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச்
சொல்லுகிறேன். 13கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச்
சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா
ஞானஸ்நானம் பெற்றீர்கள்? 14என் நாமத்தினாலே
ஞானஸ்நானங்கொடுத்தேன் என்று ஒருவனும் சொல்லாதபடிக்கு,
15நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி, உங்களில்
வேறொருவனுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை; இதற்காகத்
தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். 16ஸ்தேவானுடைய வீட்டாருக்கும்
நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு. இதுவுமல்லாமல் இன்னும்
யாருக்காவது நான் ஞானஸ்நானங் கொடுத்தேனோ இல்லையோ
அறியேன்.**

**வசனம் 11.** குலோவேயாள் என்பவர் ஓர் கிறிஸ்தவ வணிகர் என்றும், அவருடைய வீட்டார் கொரிந்துவுக்கும், எபேசுவுக்கும் இடையே பயணித்தனர் என்றும் வெகு எளிதில் கண்டுகொள்ள முடியும். குலோவேயாள் என்பது ஓர் பெண்ணின் பெயர். ஆனால்

அவள் கிறிஸ்தவளா என்பது நம்மால் உறுதிப்படுத்த முடியாது. “குலோவேயாளின் வீட்டார்” என்ற (KJV) கிங் ஜேம்ஸ் மொழி பெயர்ப்பு ஒரு வேளை தவறாக இருக்கலாம், ஏனெனில் கிரேக்க சொற்றொடர் கூறுவது, அதாவது குலோவேயாளுடன் மக்கள் தொடர்பு வைத்திருந்தார்கள். எந்தவிதத்திலோ, அவளுடைய வீட்டார் அல்லது அவள் பிரதிநிதிகள் பவுலுடன் தொடர்பு வைத்திருக்கலாம். குலோவேயாள் கொரிந்து நாட்டையோ அல்லது எபேசுநாட்டையோ சேர்ந்தவளாக இருந்திருக்கலாம். அவள் யாராக இருந்தாலும், “அவள் வீட்டார்” மூலமாக கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவ சமுதாயத்தினரிடையே பிரிவினைகளும், வாக்கு வாதங்களும் இருந்ததாக பவுல் அறிந்தார். அவளுடைய வீட்டார், கிறிஸ்தவ சமுதாயத்துடன் தொடர்பு கொண்டிருந்ததால் தான் அவர்கள் மிகவும் தெளிவாக அப்பிரச்சனையை அறிந்து கொள்ள அனுகூலமாக இருந்தது. அவர்களிடையே சண்டை சச்சரவுகள் இருந்ததை அவர்கள் மூலம் தான் அறிந்து கொண்டார். இது ஓர் குழப்பமான முன்னேற்றம்.

**வசனம் 12.** இவ்வசனத்திலுள்ள சொற்றொடர்களை புரிந்து கொள்ள அதிக கவனம் தேவை. அவர்களின் விளக்கவுரை 1 கொரிந்தியரின் துவக்க அதிகாரங்களனைத்தையும் வாசிக்கும் பொழுது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கொரிந்துவில் கிரியை செய்த மிகவும் கீழ்த்தரமான பிரிவினை ஆவியை இவ்வாறு ஓர் கேலிச்சித்திரமாக பவுல் வர்ணனை செய்திருக்கிறார் என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். எனினும், பவுல் மூன்றாம், நான்காம் அதிகாரங்களில் அவர்களுக்கு போதிப்பவர்களின் பெயர்களின் அடிப்படையில் பிரிவினைகள் ஏற்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறார். இது பெயர்களை மையமாகக் கொண்டு பிரிவினைகள் ஏற்பட்டது என்பது தெளிவாகிறது. **நான் பவுலைச் சேர்ந்தவன்**, **நான் அப்பல்லோவைச் சேர்ந்தவனென்றும்** என்று அந்தப் பிரிவினையாளர்கள் தங்களுக்கு சுலோகங்களை உருவாக்கிக் கொண்டனர். இவ்வாறு பிரிவினைகள் உருவாக, அந்தப் போதகர்கள் அவர்களை ஊக்குவித்தனர் என்பதற்கு இடமே இல்லை. கொரிந்தியர்கள் இவ்வாறு தங்களுக்குள் பிரிவினைகளை உருவாக்கிக் கொண்டனர்.

பவுலும், அப்பொல்லோவும் கொரிந்துவில் இருந்தார்கள் என்பது வேதம் வாசிப்பவர்களுக்குத் தெரியும். ஆனால் பேதுரு[4] அங்கு சென்றிருந்தாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. பேதுருவைப்பற்றி (அப். 15:7)ல், “எருசலேம் மாநாடு” என்று அழைக்கப்பட்ட அக்கூட்டத்தில் கலந்திருந்தார் என்று அப்போஸ்தல நடபடிகளில் கடைசி முறையாக அவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மாநாட்டிற்குப் பிறகு அவர் எருசலேமை விட்டு சிறிது காலம் கொரிந்துவில் இருந்திருக்கலாம். வேறு விதமாக சிந்தித்தால், எருசலேம் சபையிலுள்ள யூதக்கிறிஸ்தவர்களிடமிருந்து உபசார

நிருபங்கள் கொரிந்துவுக்கு வந்து, அதில் பேதுருவின் பெயரைப்பற்றி பேசியிருக்கலாம் (காண்க 2 கொரி. 3:1) அப்போஸ்தலர் 15:1 மற்றும் கலாத்தியர் 2:11, 12ஐ இணைத்துப் பார்க்கும் பொழுது, பவுலுக்கு எதிராக இருந்த யூதக் கிறிஸ்தவர்கள் சபைக்குள் நுழைந்து இரகசியமாக அவருடைய பணியை சிதைக்க முயன்றனர் என்பது தெளிவாகிறது. மேலும் 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதி இரண்டு ஆண்டுகளுக்குள் சபையில் உள்ள சிலர், மோசேயின் நியாயப்பிரமாணத்தை புற ஜாதியிலிருந்து வந்த கிறிஸ்தவர்களின் மீது திணிக்க முற்பட்ட ஓர் குழுவினரின் போதனையால் வசீகரிக்கப்பட்டார் (2 கொரி. 3:4-11). பேதுருவுக்கு தெரியாமலேயே சிலர் பேதுருவைத் தங்கள் பேதுருவைத் தங்கள் தலைவர் என்று கூறிக்கொண்டனர்.

பேதுரு கொரிந்துவில் இருந்தாரோ, இல்லையோ அது எப்படி இருந்தாலும், கிறிஸ்து கொரிந்துவுக்கு செல்லவில்லை. கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் என்று இப்படி ஒரு பிரிவினர் இருப்பது நமக்கு ஆச்சரியத்தைத்தான் உண்டாக்குகிறது. எல்லோரும் கிறிஸ்துவினுடையவர்கள் இல்லையா? அப்போஸ் தலன் மறுபடியும் 3:4-9ல் பிரிவினைகளைப் பற்றி கூறும் பொழுது அவர் தன்னுடைய பெயரையும், அப்பொல்லோவின் பெயரையும் தான் குறிப்பிடுகிறார். 1 கொரிந்தியர் 3:22ல் கேபாவின் பெயரும் கூடுதலாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பிரிவினைகள் அங்கு ஓர் பிரச்சனையாகக் காணப்படவில்லை. கொரிந்தியர் மத்தியில் முக்கிய தலைவர்களாக காணப்பட்டனர். ஆனால் அவர்களின் தனிப்பட்ட குணாதிசயங்கள் மாறுபட்டுக் காணப்பட்டதால் கொரிந்திய கிறிஸ்தவர்கள் தங்கள் விருப்பத்தின்படி இவ்விருவரில் ஒருவரைத் தங்கள் தலைவராகத் தெரிந்து கொண்டார்கள்.

தத்துவ கோட்பாடுகளின் அடிப்படையில் இப்பிரிவினைகள் ஏற்பட்டிருக்கலாம். பிந்தைய காலத்தில் தான் ஒரு தரப்பினர் பவுலோடும், மற்றோர் தரப்பினர் அப்பொல்லோவோடும் முற்றிலுமாக தங்களை இணைத்துக் கொண்டனர். இந்த பிரிவினைக் கூட்டத்தில் பிற பெயர்களையும் சேர்த்துக் கொண்டு, பவுல் அவர்களின் மிகவும் கீழ்த்தரமான செயல்களை கடிந்து கொண்டார். “பேதுருவின் கூட்டத்தாருடன் நாம் இணைந்து கொள்வோம்.” அல்லது “கிறிஸ்துவின் கூட்டத்தாருடன் நாம் இணைந்து கொள்வோம்” என்று ஒருவேளை அவர் கூறியிருக்கலாம். தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கு ஏற்பவும், பவுலிடம் அல்லது அப்பொல்லோவிடம் காணப்பட்ட தத்துவ சாஸ்திரங்களின் அடிப்படையில் கொரிந்துவில் இப்படிப்பட்ட பிரி வினைகள் ஏற்பட்டன என்பது தான் சாத்தியமான உண்மை. தாங்கள் பேதுருவைச் சேர்ந்தவர்கள் என்றும் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறும் தரப்பினர் இருந்திருந்தால், பேதுருவை அண்டிக்கொண்ட தரப்பினர்; பவுலைத் தொடர்ந்து கலாத்திய

சபைக்குச் சென்ற போதகர்களுடனும் இணைந் திருப்பார்கள் (கலா. 5:3-6). உண்மையாகவே நாங்கள் கிறிஸ்து வைச் சேர்ந்தவர்கள் என்ற குழு இருந்திருந்தால் அவர்கள் கர்த்தரோடு கூட்டு வைத்திருந்ததால், அவர்கள் தங்களை மிகவும் மேலானவர்கள் என்று உரிமை பாராட்டியிருப்பார்கள். இப்படி கர்த்தருடன் தங்கள் உறவு இருக்கிறது என்ற எண்ணம் அவர்களைப் பிறரைவிட அதிகமான அர்ப்பணிப்பு உடையவர்களாக மாற்றியிருக்கும்.

அப்பிரிவினைக் கூட்டத்தார் போதனையில் வேறுபட்டுக் காணப்பட்டனர் என்று பவுல் குறிப்பிடவில்லை. பண்டைய உலகத்தில் தனிமனிதனின் விசுவாசமே பெரிதும் மதிக்கப்பட்டது. கொள்கைக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பது எங்கும் காணப்படவில்லை. பவுல், அப்பொல்லோ, மற்றும் பேதுருவும் கூட வெவ்வேறு பகுதிகளில் தங்கள் கொள்கையை வலியுறுத்திக் காட்டினாலும், விசுவாசம் என்ற மையக்கருத்தையே தங்கள் மனதில் கொண்டவர்களாய் செயல்பட்டனர். அப்போஸ்தலர் நட படிக்கைகளில் அப்பொல்லோ சாதுரியமாகப் பேசுபவன் என்றும் சிறந்த கல்விமான் என்றும் விவரித்துக் காட்டுகிறது. உலக ஞானத்தைப் பெரிதும் மதித்து, மக்கள் மத்தியில் கவனத்தை விரும்பும் மக்களிடையே ஓர் தரத்தில் உயர்ந்த மனிதனாக அவன் காணப்பட்டிருக்கலாம். அக்காலத்தில் பிறரைவிட தாங்கள் மேலானவர்கள் என்று சிலர் எண்ணியிருந்தார்கள்.

**வசனம் 13.** இப்பிரிவினைகள் பற்றி இதுவரை சாந்தமாய் விளக்கி வந்த பவுல் திடீரென எரிச்சல் உடையவராக மாறினார். **கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?** ஒரு மனிதன் கிறிஸ்துவைப் பிரித்து தங்களுக்குள் நியாயமான முறையில் பங்கிட்டுக் கொள்ள முடியுமா? கிறிஸ்துவை கிறிஸ்துவின் சரீரத்தை தனித்தனி பகுதியாக பங்கிடுதல் என்பது கர்த்தரையே பங்கிடுவது போன்றது என்று பவுல் கருதினார். சபை கிறிஸ்துவின் சரீரம் (எபே. 1:22, 23). சிறந்த கிரேக்க மொழிபெயர்ப்பு μεμέρισται (*memeristai*) ஒன்று, “கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?” (NIV) என்ற பதம் பவுலின் சிந்தனையைக் கவர்ந்தது. “கிறிஸ்துவின் சரீரத்தை பல பகுதிகளாக நீங்கள் பிரிக்கத் துணிந்தீர்களா?” என்ற நம்பிக்கையற்ற கேள்வி ஓர் விடையை எதிர் பார்க்கிறது.

“அப்பொல்லோவோ அல்லது கேபாவோ உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார்களா?” என்று பவுல் கேட்டிருக்கலாம். ஆனால் இந்தக் காரியம் தனிப்பட்ட முறையில் மனக்கிலேசத்தை ஏற்படுத்தியது. பவுல் இப்படிப்பட்ட காரியங்களில் தன் பெயர் பாதிக்கப்படக் கூடாது என்று கருதினார். **பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்?** இந்தப்பிரி வினையில் தன் பெயரும் சேர்ந்திருப்பது, தன்னைத் தான் கர்த்தரென்று கூறிக்கொள்வதற்கு சமமானது என்று பவுல் நம்பியிருக்கக் கூடும். இந்த எண்ணத்தால் அவர் மிகவும் திகிலடைந்தார்.

பவுலின் மூன்றாவது கேள்வி - **பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?** - இக்கேள்வி சற்று சுவாரஸ்யமானது. கிறிஸ்துவின் நாமத்தில் தான் ஞானஸ்நானம் பெற்று தனக்கும் கிறிஸ்துவுக்கும் இருக்கும் ஓர் ஆழமான உள்ளார்த்தமான உறவை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இக்கேள்வியை கேட்பதன் மூலம் ஒருவன் ஞானஸ்நானம் பெறாமல் கிறிஸ்தவனாக இருப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்று பவுல் விளக்குகிறார் (காண்க ரோமர் 6:3, 4). பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான், அவனா அறையப்பட்டான்? என்ற கேள்வியை அவர் கேட்ட பொழுது பவுல் அல்ல கிறிஸ்து தான் சிலுவையில் அறையப்பட்டார் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இக் கேள்வியைத் தொடர்ந்து அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப் பட்டதை நினைவுப்படுத்தினார். ஞானஸ்நானம் என்பது சிலுவையினால் அவர்கள் பெற்ற நன்மைக்கு அவர்கள் பங்காளிகள் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார் (காண்க கொலோ. 2:12).

**வசனம் 14.** பவுலின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றேன் என்று ஒருவனும் சொல்லாதபடிக்கு தனிப்பட்ட முறையில் யாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. இப்படிப்பட்ட காரியங்களில் தான் எந்த ஒரு பிரிவையும் சேர்ந்தவனல்ல என்று மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். பவுல் எங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்று ஒரு சிலர் கூறலாம், ஆனால் நான் பவுலின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றேன் என்று ஒருவரும் திட்ட வட்டமாகக் கூறமுடியாது. பவுல் இந்தக்காரியத்தில் மிகவும் அச்சமுற்றிருந்தார்.

அந்த அவசர நேரத்தில், பவுல் தான், கிறிஸ்புவுக்கும், காயுவுக்கும் மாத்திரம் தான் ஞானஸ்நானம் கொடுத்தேன் என்று நினைப்பூட்டுகிறார். இந்த இரண்டு பேருக்கு மாத்திரம் ஏன் பவுல் ஞானஸ்நானம் கொடுத்தார் என்று தீர்மானிக்க வேண்டியதிருக்கிறது. இருவரும் செல்வந்தர்களாகவும், பிரசித்தி பெற்றவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். கொரிந்தி விலிருந்து பவுல் ரோமருக்கு தன் நிருபத்தை எழுதிய பொழுது தன்னையும் கொரிந்து சபையனைத்தையும் காயு விசாரித்து வருகிறான் என்று எழுதுகிறார் (ரோமர் 16:23). அனைவரும் அறிந்த வண்ணம் காயுவுக்கு ஓர் பிரமாண்டமான சொந்த வீடு இருந்தது. கிறிஸ்பு மனம் திரும்புவதற்கு முன் கொரிந்துவிலுள்ள ஜெப ஆலயத் தலைவனாக இருந்திருக்கிறான் (அப். 18:8). சமுதாயத்தில் அவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருந்ததால் பவுல் ஒருவேளை தனிப்பட்ட முறையில் ஞானஸ்நானம் கொடுத்திருக்கலாம். அவர்கள் ஞானஸ்நானம் பெற்றது சபையில் ஓர் விசேஷித்த நிகழ்ச்சியாக இருந்திருக்கலாம். “சமுதாயத்தில்

செல்வாக்கும், முக்கியமானவர் கள் என்று மதிக்கப்படும் வெகுசிலருக்கு மாத்திரம் பவுல் ஞானஸ்நானம் கொடுத்ததாகத் தெரிகிறது" என்று[5] கெர்ட் தீஸ்ஸென் குறிப்பிடுகிறார். சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்தவர்களுக்கும் தாழ்ந்த நிலையிலிருந்தவர்களுக்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடுகளினால் சபையில் பிரிவினைகள் இருந்திருக்கலாம் (காண்க 1 கொரி. 11:20-22).

**வசனம் 15.** பவுல் தன்னைத் தற்காத்துக் கொள்ள எடுத்த பிரயாசத்திலிருந்து சபைக்குள்ளே அவரை விமர்சிக்கும் ஆட்கள் இருந்தனர் என்று தெளிவாகிறது. பவுலின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றோம் என்று சிலர் கூறினாலும் தான் அறிய, தன் அனுமதியுடன் அவ்வாறு தன் பெயரில் கொடுக்கவில்லை என்பதை பிறர் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். தான் ஞானஸ்நானம் கொடுத்த எந்த ஒரு கொரிந்திய கிறிஸ்தவனும் பவுல் தன் பெயரால் **ஞானஸ்நானம்** கொடுத்தார் என்று நிச்சயமாகக் கூற முடியாது.

**வசனம் 16.** முன்பு நடந்ததை நிதானமாய் யோசித்து தன் சொந்த கைகளினால் கிறிஸ்புவுக்கும், காயுவுக்குமே ஞானஸ்நானம் கொடுத்ததாகக் கூறினார். பின்பு அவர் **ஸ்தேவானுக்கும்**, அவன் வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததை நினைவு கூர்ந்தார். அப்போஸ்தல நடபடிகளிலோ, அல்லது ரோமரிலோ அந்த கிறிஸ்தவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இங்கேயோ அல்லது அப்போஸ்தலர் 16:15, 34லிலோ குறிப்பிடப்பட்டிருக்கும் **வீட்டாருக்கும்** என்ற பதம், பெரியவர்களுடன் சிறுபிள்ளைகளும் ஞானஸ்நானம் பெற்றனர் என்று எண்ணி விடக்கூடாது. ஞானஸ்நானம் எந்த அடிப்படையில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டுமோ அந்தத் தகுதியுடையவர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதால் "வீட்டாருக்கும்" என்றால் வீட்டிலுள்ள அனைவருக்கும் கொடுக்கப்பட்டது என்றல்ல, தகுதியுடையவர்களுக்கே கொடுக்கப்பட்டது.

கொரிந்து சபையில் கிறிஸ்பு, காயுவுடன் ஸ்தேவானும் ஓர் முக்கிய அங்கத்தினராக இருந்திருக்க வேண்டும். ஸ்தேவான் கொரிந்துவில் தன் ஊழியத்தின் முதற்பலனானவர்களில் ஒருவர் என்றும், கொரிந்து சபை ஸ்தேவானைப் போன்றவர்களை ஆவிக்குரிய தலைவர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு ஆலோசனை கூறினார் (1 கொரி. 16:15, 16). கொரிந்திய சபை பவுலுக்கு அனுப்பிய கடிதத்தை எபேசுவுக்குக் கொண்டு சென்றவர்களில் ஸ்தேவானும் ஒருவர் என்று கூறப்படுகிறது (7:1; 16:17). அவருடன் சென்ற மற்ற இருவரின் பெயர்கள் பொதுவாக அடிமைகளுக்கு வைக்கும் பெயரைப் போன்றுள்ளது. "பொர்த்துநாத்து" என்ற பெயரின் அர்த்தம் "அதிர்ஷ்டம்" என்பது போலவும், "அகாயுக்கு" இனத்தின் அடிப்

படையில் வைக்கப்பட்டதும், அகாயா நாட்டைச் சேர்ந்தவரென்றும் கருதப்படுகிறது; அகாயா நாட்டில் கொரிந்து ரோமர்களின் ஆட்சி பீடமாகத் திகழ்ந்தது. ஸ்தேவான், தன்னுடைய இரண்டு அடிமைகளையும் கொரிந்துவிலிருந்து எபேசுவுக்கு பவுலுடன் கலந்தாலோசிக்க, தன்னுடன் அழைத்துச் சென்றிருக்கலாம். எப்பொழுதும் பயணத்தின் போது ஆபத்துக்கள் நேரிடும். எனவே ஒருவர் தனியே பயணிப்பதைவிட மூவர் சேர்ந்து செல்வது பாதுகாப்பானது.

ஸ்தேவானுக்குத் தான் ஞானஸ்நானம் கொடுத்ததைப் பவுல் ஆலோசித்தபின், **இன்னும் யாருக்காவது நான் ஞானஸ்நானங் கொடுத்தேனோ** இல்லையோ அதை அறியேன் என்று தன்னுடைய மறதித்தன்மையை அவர்கள் புரிந்து கொள்ளும்படி வேண்டினார். பவுலுக்கு பிறரை ஏமாற்றும் எண்ணம் கிடையாது. இன்னும் யாருக்காவது ஞானஸ்நானம் கொடுத்து அவர்கள் பெயரைக் குறிப்பிடாதிருந்தால் தன் மறதியினால்தான் இருக்கும் என்றும் கூறினார். பரிசுத்த ஆவியானவர் கட்டளையின்படி செயல்பட்டதைவிட ஆவியானவரின் ஏவுதலினால் செயல்பட்டதை இவர் வார்த்தைகள் நினைவுப்படுத்துகிறது. எத்தனை பேருக்கு பவுல் அப்போஸ்தலன் ஞானஸ்நானம் கொடுத்தார் என்பது ஆவியானவருக்குத் தெரியுமேயன்றி பவுல் அப்போஸ்தலனுக்குத் தெரியாது.

## கிறிஸ்துவின் சிலுவையின் மீது கவனம் செலுத்துவது (1:17)

**17ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்.**

**வசனம் 17.** கொரிந்தியரில் சிலருக்கு மாத்திரம் தன் சொந்தக்கைகளால் ஞானஸ்நானம் கொடுத்ததற்கு காரணம் என்னவெனில் தேவன் அவரை **சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்**. பவுல் பிரசங்கித்த விதமும், அவருடைய பிரசங்கத்தின் கருப்பொருளும் கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்டதின் அடிப்படையிலே அமைந்திருந்தது. கொரிந்துவில் பவுலின் போதனை, கிறிஸ்துவுக்குள் ஓர் அப்போஸ்தலனின் அதிகாரத்தை உறுதிப்படுத்தியது. ஞானஸ்நானம் என்பது சரீரபிரகாரமாக கிறிஸ்துவை அறிக்கை செய்தல் ஆகும், யார் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள் என்பது ஓர் பொருட்டல்ல. ஒருவர் ஞானஸ்நானம் பெறும்பொழுது கர்த்தர் நம் பாவத்தைப் போக்க என்ன செய்கிறார் என்பது தான் மிகவும் முக்கியம். ஞானஸ்நானம் பெறுவது அவரவர் விருப்பம் என்று அப்போஸ்தலர்

எங்கும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் எடுப்பது என்பது அவருடன் அடக்கம் பண்ணப்பட்டு, அவருடன் எழுந்திருப்பதாகவும் கருதப்படுகிறது (ரோமர் 6:4; கொலோ. 2:12). ஞானஸ்நானத்தினால் ஆட்டுக்குட்டியானவரின் மீட்பின் இரத்தத்தினால் கிறிஸ்தவர்கள் தங்கள் பாவம் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுகிறார்கள் (1 கொரி. 6:11).

**கிறிஸ்துவின் சிலுவை** வீணாய்ப் போகாதபடி பவுல் சாதுரிய ஞானமில்லாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். கொரிந்தியர்களின் நாகரீகம், அறுதியிட்டுக் கூறும் ஞானத் தையையே முக்கியப்படுத்திக் கொண்டு செயல்பட்டதால்தான் சபையில் பிரிவினைகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது என்று கூறுகிறார். அக்காலக்கட்டத்தில் கொரிந்துவிலும், பிற கிரேக்க பட்டணங்களிலும், அவ்வப்போது வந்து செல்லும் ஊரூராய் பயணிக்கும் போதகர்களின் பிரசங்கத்தைப் போலல்லாது பவுலின் பிரசங்கம் மாறுபட்டுக் காணப்பட்டது. தன் பேச்சு சாதுரியத்தாலும், கல்வியினாலும் பிறரைக் கவர்ச்சிக்க அவர் பிரயாசப்படவில்லை. அவருடைய செய்தி தெய்வீகத் தன்மை யுடையதாகக் காணப்பட்டது. மனிதன் சுய முயற்சியின் மீது சார்ந்திருக்கும் பொழுது, கிறிஸ்துவின் சிலுவை வீணாய் போயிருக்கும். பவுல் பிரசங்கித்த செய்தியின் கருப்பொருளினால் மாத்திரம் அல்லாது அவர் பிரங்கித்த விதத்திலும் கிறிஸ்துவை பிரியப்படுத்தவே விரும்பினார்.

கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும், எல்லா அறிவிலும் மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாய் இருக்கிறார்களென்று பவுல் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளார் (1:5). ஆனால் சில விசுவாசிகள் இன்னும் அதிகமாய் எதிர்பார்க்கிறார்கள். கிரேக்க-ரோம நாடுகளில் பேச்சு வன்மைக்கும், தத்துவ சாஸ்திரங்களுக்குமான கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவற்றால் ஈர்க்கப்பட்டது போல சில கொரிந்தியரும் ஈர்க்கப்பட்டிருந்தனர் (3:18-20). அக்காலத்திய நாவன்மையான பேச்சு முறைகளை பவுல் நன்கு அறிந்திருந்தார். ஆனால் சாதுரிய ஞானத்தோடு பேச அவர் அழைக்கப்படவில்லை. கொரிந்தியருக்கு அவர் என்ன உபதேசித்தாரோ அதற்கும், அவர் என்ன எழுதிக் கொண்டிருந்தாரோ அதற்குமான பிரதிபலன் நிர்ணயிக்கப்படவில்லை. சபையில் காணப்பட்ட சாராம்சத்தைவிட சபையின் பொதுவான தோற்றம் குறைந்து மதிப்பிடப்பட்டது. “கிறிஸ்துவின் சிலுவையைவிட” அப்போஸ்தலர் ஓர் சிறந்த கல்விமான் என்ற புகழ் அவருக்கு அவ்வளவு முக்கியத்துவ மிக்கதாகக் காணப்படவில்லை. சாதுரியத்தை நாடிச் செல்வது என்பது சிலுவையில் வெளிப்பட்ட தேவ கிருபையை ஒன்று மில்லாமல் செய்வதாக பவுல் எண்ணினார்.

# தேவனுடைய ஞானம் (1:18-31)

கொரிந்துவிலும், இந்த கிரேக்கப் பட்டணங்களிலும் நிலவிய சமயச் சூழ்நிலை என்னவெனில் சாதுரியமான பேச்சுக்களைக் கேட்டும், நிலையில்லா வசதியான வாழ்க்கையை கண்டும் ஆச்சரியத்திற்குள்ளாகி அவற்றையே பின்பற்றும் நிலை காணப்பட்டது. பவுலின் நிருபத்தில் ஒரு குறிப்பிட்ட கல்வியின் முக்கியத்துவத்தைக் குறித்து ஒன்றும் எழுதப்படவில்லை. சபையில் உள்ள கிறிஸ்தவர்களில் சிலர் தங்களைத் தாங்களே பிறரைவிட மேலானவர்களாகக் கருதிக் கொண்டவர்களை பிறர் ஆதரித்த தினாலும், சலுகைகளைக் கொடுத்ததன் விளைவாகவும் சபையில் பிரிவினையின் ஆவி நிலவியது. உலகத்தரமான வல்லமை செல்வாக்கு போன்றவற்றை திருச்சபை தனதாக்கிக் கொண்டது. இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கையிடும் சமுதாயத்தில் உலகம் சிறந்தது என்று கூறும் வல்லமைக்கும், ஞானத்திற்கும் ஒரு சிறிதும் இடமில்லை என்று தன் நிருபத்தை வாசிப்பவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று மனவேதனையுடன் போராடி எழுதுகிறார். அவர்கள் சேவிக்கும் கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டவர். உலகத்தில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை தேவன் தெரிந்து கொண்டார். கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு மனநிலை சார்ந்த ஓர் பிரச்சனை இருந்தது. கிறிஸ்துவின் ஆவியைத் தங்களதாக்கிக் கொள்ளும் அளவிற்கு அவர்களுடைய செயல் பாட்டில் மாற்றம் தேவைப்படுகிறது.

## சிலுவையைப் பற்றிய உபதேசத்தின் “பைத்தியக்காரத்தன்மை” (1:18-25)

**18சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்ளுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. 19அந்தப்படி: ஞானிகளுடைய ஞானத் தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது. 20ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா? 21எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத் தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று. 22யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; 23நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமுமாயிருக் கிறார். 24ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ**

**அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமு மாயிருக்கிறார். [25]இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப் படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.**

**வசனம் 18.** பவுல் எதிர்மறையான இரண்டு குழுவினரைப் பற்றி கூறுகிறார்: அழிந்து போகிறவர்கள் மற்றும், இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம், தொடர்ந்து நடக்கப் போகிற நிகழ்ச்சிக்கு நம்மை ஆயத்தப்படுத்தும் வண்ணம் நிகழ்காலத்தைப் பயன்படுத்துகிறார். அவரின் எதிர்மறைக் கூற்று இரட்சிக்கப் பட்டவர்கள் மற்றும் அழிந்து போனவர்களுக்கு இடையே அல்ல. ஆனால் அழிந்து போய்க் கொண்டிருக்கிறவர்களும் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும் இடையே உள்ள வேற்றுமையைத்தான் குறிப்பிடுகிறார். பவுலுக்கு கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பது "ஓர் முற்றுப்பெற்ற" காரியமல்ல, ஆனால் அது இந்த உலகத்தில், உலகத்திற்கு புறம்பாக வாழ ஒவ்வொரு நிமிடமும் தீர்மானம் எடுத்து படிப்படியாக மலர் மலர்வது போல் விரிந்து மலரும் ஓர் நாடக நிகழ்ச்சியாகும்.

"அழிந்து போய்க் கொண்டிருக்கிறவர்"களின் அடையாளம் என்னவென்றால் இரட்சகர் சிலுவையில் அறையப்பட்டார் என்பது அவர்களின் எண்ணப்படி ஓர் பைத்தியக்காரத்தனம்: மனிதரின் பார்வையில் சிலுவையின் உபதேசம் பைத்தியமும், தடுக்கல்லு மாயிருக்கிறது. உலகஞானம் என்று கருதப்படுவதில் பைத்தியம் காணப்படுகிறது. சாதாரண மனிதனுக்கு மரத்தில் தூக்கப்பட்ட ஓர் குற்றவாளியைக்குறித்த உபதேசத்தில் தத்துவ சாஸ்திரமோ அல்லது சாதுரியமோ இருப்பதாகக் காணப்படவில்லை.[6] ஓர் கிறிஸ்தவனின் அறிக்கையின் (15:3) ஆரம்ப நிலையே ஞானவான்களின் கருத்துப்படி உயர்தரமான கல்வி என்பதற்கு எதிர்மறையாகக் காணப்படுகிறது.

"இரட்சிக்கப்படுகிற நமக்கு" தேவபெலனாக காணப்படுகிறது என்ற விசுவாசம் நம் கண்களுக்கு ஆச்சரியப்படத்தக்க ஒன்றாகக் காணப்படுகிறது. தேவன் நசரேயனாகிய இயேசுவை சிலுவைக்கு அனுப்பி மனுக்குலத்தை இரட்சித்த பொழுது, வல்லமை பற்றிய கருத்து, புத்திக்கூர்மை, உலக ஞானம் போன்ற இவை அனைத்தும் தலைகீழாக மாறியது. தன் சிலுவையினால் கிறிஸ்தவ சமுதாயம் உருவாக்கப்படுகிறது. தன் நிருபத்தை வாசிப்பவர்களுக்காக அப்போஸ்தலர் மிகவும் பரிதபித்தார். மனித விசுவாசம், தன் கௌரவத்தை வெளிக்காட்டுவதற்கான போட்டிகளில் பிளவுபட்ட செயல்பாடுகளில் ஈடுபட்டதால் கொரிந்தியர்கள் சிலுவையை புரிந்து கொள்ள இயலவில்லை. இந்த முரண்பாட்டை அவர்கள் ஏன் கண்டு கொள்ளத் தவறினார்கள்? சிலுவையில் மரித்த மக்கள் எத்தன்மையானவர்கள் என்று அப்போஸ்தலர் விவரிக்கத்

தேவையில்லை. உதவியற்றவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், சமூகத்தால் விலக்கிவைக்கப்பட்டவர்கள், துஷ்டத்தனமானவர்கள் சிலுவையில் அறையப்பட்டனர். ஆனால் இளவரசர்களோ, அரசர் களோ, இரட்சகர்களோ சிலுவையில் அறையப்படவில்லை. ஆயினும் "இரட்சிக்கப்படுகிற நமக்கோ" தேவ பெலன் சிலுவையில் இருக்கிறது.

**வசனம் 19.** மனுக்குலத்தின் ஒவ்வொரு நிலையிலும் நிலவிய வல்லமை, ஆட்சி ஆகியவற்றிற்கு சவாலாக, சிலுவை முற்றிலும் மாறுபட்ட, புதிய காரியத்தைக் கொடுத்தது. யூதமத வேதத்தை புத்திக் கூர்மையுடன் வாசிக்கும் எந்த நபரும், தேவனுடைய வெளிப்பாட்டின் அடிப்படை கருத்துக்களிலிருந்து சிலுவை ஒரு சிறிதும் வழி விலகிச் செல்லவில்லை என்பதை அறிந்து கொள்ள முடியும். சிநேயார் சம பூமியில் வாழ்ந்த பண்டைய மக்களின் வரலாறு அழிந்து போகிறவர்களுக்கு ஓர் முன்னுதாரணம் (ஆதி. 11:1-9). மக்கள் தொடர்ந்து கோபுரங்களைக் கட்டினார்கள், தேவனும் தொடர்ந்து இறங்கி வந்து அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்கிப் போடுகிறார். அன்னாளிலிருந்து (1 சாமு. 2:1-10) மரியாள் வரை (லூக். 1:46-55) தேவன் தேவையானவர்களை சாம்பல் குவியலிருந்து (புழுதி) தூக்கி எடுத்துக் கொண்டிருக் கிறார். **ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து** என்று தேவன் ஏசாயாவின் மூலம் அறிவித்தது புதிதான காரியம் ஒன்றையும் சொல்லவில்லை (காண்க ஏசாயா 29:14).[7] சாதுரியமான பேச்சுத்திறமை, உயர்ந்த கல்வி போன்றவற்றால் ஈர்க்கப்படுபவர்களை விமர்சிப்பதற்கு பதிலாக கொரிந்திய கிறிஸ்தவர்கள் சிலுவைப்பற்றிய காரியங்களையும் நோக்கிப்பார்த்தால் அது சிறந்ததாகக்காணப்படும்.

**வசனம் 20.** உலகத்தால், கல்வி கற்றவர்கள் என்று அறியப்படும் மக்கள் கொரிந்து விசுவாசிகளில் இல்லை என்பது பவுல் கேட்ட கேள்வியிலிருந்து தெளிவாகிறது. **ஞானி எங்கே?** என்ற கேள்வி யிலிருந்து உலக ஞானம் இரட்சிப்பிற்கு வழி அல்ல என்று மிகவும் கண்ணியமான முறையில் அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். அப்போஸ்தலர் ஞானத்தை முற்றிலுமாகப் புறக்கணிக்கவில்லை. உலக ஞானத்தை விட தேவன் அருளும் ஞானம் வேறு வகையைச் சார்ந்தது என்று தான் பவுல் கூறுகிறார் (2:6). "பிதாவே வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர்ராஸிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திரு உள்ளத்திற்குப் பிரியமாயிருக்கிறது" என்று இயேசுவும் இதே காரியத்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறார் (லூக். 10:21).

ஓர் காரியத்தை பேச்சின் மூலமாகவோ, எழுத்தின் மூலமாகவோ மிகச் சாதுரியமாக வாதாடினால் கிரேக்கர்களுக்கும், ரோமர் களுக்கும், அது ஞானத்திற்கும், சிறந்த கல்விக்குமான வெளிப்பாடு என்று

கருதினர். கொரிந்து சபை மக்கள் தங்களை சுற்றியுள்ளவர்களைப் பார்த்து **வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே?** என்று கேட்க விரும்பினார். இவ்வுலக அறிவாளிகளுக்கு கிறிஸ்துவுக்குக் கொடுக்க நேரமில்லை. இவ்வுலகத்தில் ஆடம்பரமாக வாழும் மக்களை உயர்வாக மதிப்பதன் காரணம் என்ன? என்று கொரிந்தியரிடம் கேட்டார். கிறிஸ்தவர்களுக்கு ஆசீர்வாதத்தை அளித்த பொழுது, **இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கினார்**.

சிலரை "ஞானிகள்," சிலரை "வேதபாரகர்," சிலரை "தர்க்க சாஸ்திரிகள்" என்று பலதரப்பட்ட பிரிவினராகப் பவுல் சிந்திக்கவில்லை. உலகம் மதிக்கும், தகுதிகளையும், தன்மை களையும் அடிப்படையாகக் கொண்டே பவுல் 20ம் வசனத்தில் பலதரப்பட்டவர்களைப் பொதுவாகக் குறிப்பிடுகிறார். தரிசுவிலும் எருசலேமிலும், தான் கற்ற கல்வியை ஒருவேளை இங்கு பிரதி பலித்துக் காட்டலாம். அறிவை அவர் துச்சமாக மதிக்கவில்லை. உண்மையான அறிவு கிறிஸ்துவின் காரியங்களுக்காக சேவை செய்யும், ஆனால் கொரிந்துவின் ஞானத்தையும் தாண்டி சுயமாய் சேவை செய்யும் பண்புகளுக்கும் மேலாக அது செயல்படாது.

**வசனம் 21.** சந்தைவெளிகளில் தங்கள் ஞானிகளென்றும், கல்விமான்களென்றும் பெருமைபட்டுக் கொள்ளுபவர்களின் ஞானத்திலிருந்து கல்விமான்களான தத்துவ மேதைகளுக்கும் உள்ள வேறுபாட்டை கூடுமானவரை மிகத்துல்லியமாக விளக்குவதுடன் பவுல் அறிவித்து கிறிஸ்தவர்கள் கேட்ட பைத்தியமான சுவிசேஷத்தைப் பற்றி கூறுகிறார். மனுக்குலம் அதாவது **உலகம்** (κόσμος, *kosmos*) தன் விருப்பபடி உபாயதந்திரங்களின் வாயிலாக, இயற்கைக் காட்சிகளில் தெய்வத்தின் தெளிவற்ற தோற்றத்தையே காண்கிறார்கள் என்று பவுல் அறிந்திருந்தார் (ரோமர் 1:20). தேவனைப்பற்றி, நாம் காணும் இவ்வுலகம், எந்தவிதமான ஆழமான அறிவைப் போதித்திருந்தாலும் இவற்றை பாவம் அசுசிப் படுத்திவிட்டது. தங்களுக்கே சொந்தமான தெய்வங்களாவதைத் தேடிக் கொண்டு, அவர்கள் தங்கள் பெருமை, சிற்றின்பம், போன்றவை அனுமதிக்கும் அனைத்து சுகபோகங்களினால் மனிதர் மேலெழ முடியவில்லை. "அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியகாரரானார்கள்" (ரோமர் 1:22).

பாவமனுக்குலம் தேவனை அறியத்தவறியதே தேவனுடைய ஞானத்திற்கு ஓர் சிறந்த அறிகுறி தற்பெருமையும். சிற்றின்பத்தின் மீது நாட்டமுள்ள இனத்தை தேவன் இன்னும் வெறுக்கவில்லை. அதற்கு மாறாக, சுயநலமற்ற, விவரிக்க இயலாத அன்பினால் தேவன் தம்முடைய குமாரனின் மரணத்தினால் தேவன் ஒப்புரவாகுதல் என்னும் வாசலைத் திறந்தார். அதை விசுவாசித்தவர்கள் (பவுல்) பிரசங்கித்த செய்தியின் மூலமாக இரட்சிப்பைப் பெற்றார்கள். ஆனாலும்

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவில், உலகம் ஞானத்தைக் கண்டடையவில்லை. உலகஞானம் தேவனை கண்ணாடியில் காணும் ஓர் நிழலாகவே கருதுகிறது. தேவன் தம்மைத்தாமே வெளிப்படுத்திய தன் விளைவாக பெறும் தேவ அறிவினால் மாத்திரமே சத்தியத்தை சுதந்தரிக்க முடியும். தேவனை அறிந்து கொள்ள அவருடைய வழிநடத்துதலுக்காகவும், ஒழுக்கம் மற்றும் நீதி நெறி முறைகளில், யாருக்குத் தம்மை வெளிப்படுத்தினாரோ அப்படிப்பட்டவர்களுடன் இசைந்து வாழ்வதற்கு அவரில் சார்ந்திருப்பதுதான் தேவனை அறிந்து கொள்ளுதல் ஆகும்.

**வசனம் 22.** சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரைப்பற்றிய பைத்தியமாகத் தோன்றும் உபதேசத்திற்கு செவி மடுக்கும் மனுக்குலத்தை இரு வேறு பிரிவினராகப் பிரிக்கிறார். **யூதர்கள்**, கிரேக்கர் ஆனாலும் அவற்றை பொதுவாகக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு யூதனும், அல்லது ஒவ்வொரு கிரேக்கனும் ஒரே விதத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இந்த இரு இனக்குழுக்களும் தனித்தனியே தங்கள் பரம்பரை பழக்கவழக்கங்கள், தங்கள் திறமையையே சார்ந்திருந்ததால் தேவனுடைய ஞானத்தைப் புறக்கணித்தார்கள். தாங்கள் கேட்கும் சத்தியத்திற்கு ஆதாரமாக வானத்திலிருந்து **அடையாளத்தைக் கேட்கிறார்கள்**. இயேசு அவர்கள் கேள்விகளுக்கு பதில் அளித்தார். இயேசு கலிலேயாவில் செய்த ஊழியத்தைப்பற்றி பவுல் எவ்வளவு தூரத்திற்கு அறிந்திருந்தாரோ அது தெரியாது. ஆனால் யூதமதத் தலைவர் களுக்கும், இயேசுவுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனைகளின் விவரங்களைப் பவுல் ஒருவேளை கேட்டிருக்ககூடும். “போதகரே உம்மால் ஓர் அடையாளத்தைக் காண விரும்புகிறோம்” என்று கேட்டார்கள் (மத். 12:38). “உம்மை விசுவாசிக்கும் படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்?” என்று கேட்டார்கள் (யோவான் 6:30).

இயேசுவின் ஊழியம் முழுவதும் அடையாளங்களால் நிறைந்திருந்த பொழுது, யூதர்கள் அடையாளத்தைக் கேட்டது ஓர் முரண்பாடாகவே காணப்பட்டது ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை யூதர்கள் நிறைவேற்றினார்கள். “... அவர்கள் கண்டும் காணாதவர் களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது” (மாற்கு 4:12; காண்க ஏசாயா 6:9, 10). இயேசு செய்த கிரியைகளில் அடையாளங்கள் எல்லையற்று காணப்பட்டது. “அப்போஸ்தலருக்குரிய அடையாளங்கள் ... உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே” (2 கொரி. 12:12). “பைத்திய மாகத் தோன்றுகிற பிரசங்கத்தை” யூதர்கள் ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள் (1 கொரி. 1:21). அடையாளங்களைக் கேட்டும், அடையாளங்களால் அவர்கள் திருப்தி அடையவில்லை.

சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரின் நற்செய்திக்கு **கிரேக்கர்**களின் பிரதிவினை என்னவெனில் நாங்கள் அதைப்பற்றி ஏற்கனவே அறிந்த ஒர் காரியம் என்று மகிழ்வுடன் அறிவித்தார்கள். ஏனென்றால் ஞானத்தை தேடுவதில் பிரசித்தி பெற்று விளங்கி னார்கள். துவக்ககால கிறிஸ்தவ சகாப்தத்தில் கிரேக்க சிந்தனையாளர் மத்தியில் வருங்காலத்தைப்பற்றி ஊகிக்கும் தன்மை உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. ஞானம் என்பது குழுக்களுக்கு அளிக்கப்பட்டது அல்ல. ஆனால் ஞானிகள் தனித்திருந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்து பெறுவது ஆகும். தெருவில் உபதேசம் செய்பவர்கள் அறிவிலிகளிலிருந்து உயர்கல்விமான்கள் என பல தரப்பட்டவர்களாக இருந்தனர். அவர்கள் பேச்சைக் கேட்ட சாதாரண மக்கள்கூட புத்தி கூர்மையான விமரிசர்களாக விளங்கினர். செருப்பு தைப்பவர், தோல் பதனிடுபவர், நகரில் சமீபத்தில் விரிவான பல விஷயங்களைப் பேசவந்த தத்துவ மேதைகளின் கருத்துக்களின் சிறப்புபற்றி தங்களுக்குள்ளே அவர்கள் விவாதித்தனர். பெரும்பான்மையான கிரேக்கர்கள் பவுல் தன்னை சமீபகாலத்தில் வெளிக்காட்டியவர் என்ற எண்ணம் ஏற்பட்டது. மறைவான அர்த்தமுடைய வார்த்தைகளை பயன் படுத்துவது, சாதுரியமான சொல் நயத்துடன் பேசுவது, புதிய, புதிய விளக்கங்கள் போன்றவற்றை எதிர்பார்த்தனர். சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்த இரட்சகரால் மறுரூபமாக்கப்பட்ட ஜீவியத்தைப் பெற்றுக்கொள்வதும், தேவனை அறிவதும் என்னும் காரியங்கள், ஞானத்தைத் தேடியதையும் கிரேக்கர்களுக்கு எட்டாக் கனியாகவே காணப்பட்டது.

**வசனம் 23.** யூதர்கள் அடையாளத்தைத் தேடுவதும், கிரேக்கர்கள் ஞானத்தில் பைத்தியமாயிருப்பதையும் பார்த்த பவுல் எந்த விதத் தயக்கமின்றி ஆணித்தரமாக “நாங்களோ” என்ற ஒர் மாறுபட்ட கருத்தை பவுல் கொரிந்தியருக்கு அறிவிக்கிறார். **நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்.** தேவனுடைய அபிஷேகத்தைப் பற்றி யூதர்களின் எதிர்பார்ப்பை திருப்திப்படுத்த பவுல் எந்தவித அடையாளங்களையும் கொடுக்கவில்லை. புறஜாதியான ஞானிகள் சதியாலோசனைக்கு எந்தவித ஞானத்தையும் கொடுக்கவில்லை. ஒருவரும் எதிர்பார்க்காத திசையில் சத்தியம் காணப்படுகிறது. சிலுவையில் இறுதியான முரண்பாடும், இறுதியான தேவஞானமும் வெளிப்பட்டது. “அவர் பெலவீனத்தால் சிலுவையில் அறையப் பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்” (2 கொரி. 13:4).

லியோன் மோரிஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார்: “மிகவும் தாழ்ந்த நிலையிலிருப்பவனும் தேவனை அறியவும், தீமையை மேற்கொள்ளவும் சிலுவையில் உள்ள வல்லமை வழி திறக்கிறது. தத்துவ மேதைகள் வெளிப்படுத்தும் ஞானத்தை விட, மேற்கூறிய

ஞானம், மிக, மிக அதிகமாக மேலானது."[8] "பவுல் அறிந்திருந்த கிறிஸ்துவின் கோர மரணத்தைப் பற்றிய வர்ணனை மனுக்குலம் அதைத் தாண்டிச் செல்ல இயலாத அளவிற்கு சிலுவையின் சின்னம் மையப்பொருளாகக் காணப்பட்டது"[9] என்று பிரிவார்ட் S. சைல்டஸ் கூறுகிறார்.

யோவான் ஸ்நானகன் "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று கிறிஸ்துவை அறிமுகப்படுத்துகிறார் (யோவான் 1:29). பத்தாண்டுகள் பல கழிந்தபின் யோவான் அப்போஸ்தலன் சன் தரிசனத்தில் வெள்ளைக் குதிரையின் மேல் ஏறியிருந்தவரைக் கண்டதாகவும், "அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்" என்றும் விளக்குகிறார் (வெளி. 6:2). சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து ஆட்சிபுரியும் இரட்சகராக மாறினார். தேவனுடைய வல்லமை யூதர்களுடைய எதிர்பார்ப்புகளை ஒன்றுமில்லாததாக்கியது. அவருடைய ஞானம் சிலுவையை புறமதஸ்தருக்கு பைத்தியமாக்கி குழப்பத்திற்குள்ளாக்கியது. பலவீனத்தில், பலம், ஞானத்தில் பைத்தியக்காரத்தனம் என்ற எதிரும், புதிருமான காரியம், அப்போஸ்தலருக்கு ஓர் வழி காட்டும் நட்சத்திரமாக மாறியது. "நான் மேன்மை பாராட்ட வேண்டுமானால் என் பலவீனத்திற்கடுத்தவைகளைக் குறித்து மேன்மை பாராட்டுவேன்" என்று பின்காலத்தில் கூறுகிறார் (2 கொரி. 11:30), "… அந்தப்படி நான் பெலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (2 கொரி. 12:10).

**வசனம் 24.** அடையாளங்கள், தத்துவ யூகங்கள் போன்ற எதிர்பார்ப்புகளுடன் மனுக்குலம் தேவனை நெருங்கிச் சேர எடுக்கும் பிரயாசங்களுக்கும், தேவன் தாமே முன் வந்து மனுக்குலத்தை இரட்சிக்க காத்திருப்பதற்கும் உள்ள மாறுபாட்டை பவுல் அப்போஸ்தலன் தொடர்ந்து சுட்டிக்காட்டுகிறார். தெய்வீகப் போதனைகளைப் பற்றி கிறிஸ்தவ உபதேசம் மானசீகமான வியூகத்தின் அடிப்படையில் ஏற்பட்டதல்ல, ஆனால் தேவன் செய்து முடித்த நிச்சயிக்கப்பட்ட ஓர் காரியம். சிலுவையில் அறையப்பட்ட இயேசு **தேவவல்லமையும்**, **தேவஞானமுமாய்**, அனைத்து மக்களுக்கும் அல்ல ஆனால் **அழைக்கப்பட்டவர்**களுக்கு மாத்திரமே காணப்பட்டார். கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டவர்கள், அவர்கள் தேவன் முந்தி அழைத்த அழைப்பை கவனத்துடன் ஏற்றுக்கொள்பவர்களாயிருப்பதால், அழைப்பிற்கு சாதகமாக இருப்பதால் அழைக்கப்பட்டவன் அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது.

பவுலினுடைய உபதேசம் தத்துவ சாஸ்திரங்களினால் உருவாக்கப்பட்டதல்ல. பாவிகளாக இருந்தாலும், தேவன் பவுலும், அவர் நிருபத்தை வாசிப்பவர்களும், மீட்கப்பட்டவர்கள் ஆகையால்

அவர்களை தொடர்ந்து நேசிக்கிறார் என்ற வெளிப்பாடு அவர்களுக்கு இருந்தது. கொரிந்தியர்கள் தேவ உபதேசத்தை கவனமாக ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கிடையே உள்ள பிரிவினைகளும், மனுஷீக வல்லமை, ஞானம் அவற்றைச் சார்ந்திருத்தலும் குறைந்துவிடும் என்று பவுல் எண்ணினார்.

**வசனம் 25.** சுவிசேஷத்தின் சத்தியத்தின் மீது பவுல் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததால், அது பைத்தியமாகவும், பலவீன மாகவும் தோற்றமளிப்பதையும் பவுல் ஏற்றுக் கொண்டார். மனிதனின் மதிப்பீட்டின்படி சிலுவையை மேன்மைப்படுத்துவதற்கு அதில் புகழ் ஒன்றுமில்லை. கெட்டுப்போகிறவர்களுக்கு சுவிசேஷம் பைத்தியமென்று தீர்மானிப்பதற்கு காரண காரியங்கள் உண்டு. ஆனால் **தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும்** அதிகமாயிருக்கிறது என்று பவுல் பதிலுரைக்கிறார். மனுஷர் சுவிசேஷத்தைப் பைத்தியமென்று கூறுவது அது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதற்கு சாட்சியாயிருக்கிறது. மனிதனின் எதிர் பார்ப்பின்படி தேவனிடமிருந்து அதற்கு இணையான மற்றுமோர் சாட்சியை ஒருவரும் எதிர்பார்க்கக் கூடாது. தேவனுடைய பைத்தியம் அல்லது ஞானம் என்பது உலகத்தின் கணிப்பைவிட மிக முக்கியமானது என்பது ஓர் உண்மை. தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது. மனிதர் அவர்கள் விருப்பபடி தர்க்கிக்கட்டும், இறுதியில் தேவன் வெற்றி பெறுவார், தேவன் வருவார். இரட்சிப்பு இன்றும், இனி மேலும் சிலுவையின் மூலம் தான் கிடைக்கும்.

## கிறிஸ்துவில் காணப்பட்ட ஞானம் (1:26-31)

**26எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள்
அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. 27ஞானிகளை
வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்திய மானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.
28உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப் பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார். 29மாம்சமான
எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். 30அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து
இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக, 31அவரே தேவனால் நமக்கு ஞானமும்**

***நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.***

**வசனம் 26.** தான் கூறியதை உறுதிசெய்வதற்கு ஆதரவாக பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களின் அனுபவத்தை குறிப்பிடுகிறார். மக்களின் முன் நன் மதிப்பை பெற்றுக்கொள்வதற்காக, கிறிஸ்துவைப் பற்றிய உபதேசம் நியாயம் தீர்க்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட பின், தத்துவ சாஸ்திரங்களையும், சமய வியூகங்களையும் அவர்கள் பின்பற்றுவது எவ்வளவு விரோதமான செயலாகக் காணப்படுகிறது. அவர்களில் **ஞானிகள் அநேகரில்லை**, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. வருங் காலத்தில் கிறிஸ்தவம் என்பது உலகத்தில் உயர்கல்வி கற்ற அறிவாளிகளிடத்திலோ, பெரும் செல்வந்தர்களிடத்திலோ, உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பிரபுக்களிடத்திலோ இல்லை. ஆனால் கிறிஸ்துவையும், "சிலுவையில் அறையப்பட்ட அவரையும்" (2:2) விசுவாசத்துடன் தங்கள் உள்ளதில் முதன்மையானதாக ஏற்றுக் கொண்ட விவசாயிகள், தொழிலாளிகளிடம் தான் வருங்காலத்தில் கிறிஸ்தவம் இருக்கிறது.

கிறிஸ்தவ சகாப்தத்தின் துவக்க நூற்றாண்டுகளில் கிறிஸ்தவம் ஏமாற்றுவதான, ஏமாற்றக் கூடியதான பண்புகளை தன்னகத்தே கொண்டிருந்ததாக விமரிசகர்கள் நினைத்திருந்தனர். கிறிஸ்தவர்களுக்கு எதிராக இரண்டாவது நூற்றாண்டில் எழுதிய எதிரிகள், "உரோமத் தொழிலாளர்கள், [கம்பளி] செருப்புத் தைப்பவர்கள், சலவைத் தொழிலாளிகள் கல்வியறிவு சிறிதுகூட இல்லாத அறிவிலிகள் [பக்கோலிக்யோக் கல்கள்] போன்ற அறியாமை கொண்ட கூட்டத்தினர் தங்கள் நிலையிலிருந்து வெளியேறி போதகராகத் தங்களைக் கருதிக்கொண்டார்கள்"[10] என்று குறிப்பிட்டனர். கீழ்த்தரமான (இழிவான) பணிச் செய்பவர்கள், உலக ஞானிகள் நினைப்பது போல் அறியாமையுள்ளவர்களும், ஏமாற்றபடுபவர்களுமாயிருக்க மாட்டார்கள் என்று பவுல் நினைத்திருந்தாலும், உலகில் ஞானிகளுக்கும், உயர் கல்வி கற்றோருக்கும் சிலுவையின் செய்தியைக் கேட்க சமயம் கிடைக்காத நிலையில் இருந்தனர் என்று பவுல் ஆமோதித்தார். உலக ஞானத்திற்கு, சிலுவையின் ஞானம். மிகவும் ஆழமானதாகக் காணப்பட்டது. "உங்களைச் சுற்றிலும் பாருங்கள்," **நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பையும் பாருங்கள்** என்று பவுல் அப்போஸ்தலர் கொரிந்தியருக்கு சவால் விடுகிறார்.

கொரிந்துவிலுள்ள ஆதிக்கிறிஸ்தவர்களில் **மாமிச வழக்கத்தின்படி** சமுதாய, பொருளாதார நிலையில் கொரிந்திய விசுவாசிகளில் "ஞானிகள் அநேகரில்லை" என்ற கேள்வி எழுவதை பவுல் குறிப்பிடுகிறார். உண்மையாகவே ஒரு சில கல்விமான்களும், செல் வந்தர்களும் இருந்தார்களா? தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டு உலக ஞானிகள் சபையில் இல்லை என்பதை 1:20ல்

கேட்கப்பட்ட கேள்வி தெளிவாக்குகிறது.

> ... உள்ளூர் நகரங்களிலும், பட்டணங்களிலும், சில விசுவாசிகள் கல்விமான்களாகவும், சமுதாயத்தில் உயர் அந்தஸ்த்தில் இருந்தார்கள். ஆனால் நாம் கருத்தில் கொள்ள வேண்டியது ஒரு சிலர் என்பது அல்ல, அந்த இயக்கத்தில் முழுவதும் பெரும்பான்மையானவர்களின் தன்மையே என்று ஜான் காகர் சரியாக எழுதியிருக்கிறார்.[11]

பேரரசில் வாழ்ந்த ஏழை எளியவர்களும், புறக்கணிக் கப்பட்டவர்களும், கிறிஸ்துவின், கிருபை, மன்னிப்பு என்ற செய்தியை மனமுவந்து ஏற்றுக் கொண்டதால், முதலாம் நூற்றாண்டில் சுவிசேஷம் பெருமளவில் உலகெங்கும் பரவியது, இந்த ஏழை எளிய, புறக்கணிக்கப்பட்ட மக்கள் வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், புளித்த மக்களாகச் செயல்பட்டு, இயேசுவே கர்த்தரென்று உலகமனைத்துக்கும் அறிவிக்கத்தக்கதான உந்து சக்திகளாக செயல்பட்டனர்.

**வசனங்கள் 27, 28.** கொரிந்துவிலிருந்த சாதாரண, எந்த விதமான பெயர், புகழ் இல்லாத, ஏழை எளிய, புறக்கணிக்கப்பட்ட, அடிமைகளாக எண்ணப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட்டனர். இது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்வு அல்ல, அது தேவசெயல். **ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்** (1:27) என்றும், மேலும்: **உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்** (1:28) என்றும் மேலும் விளக்குகிறார். தேவன் ஒரு நோக்கத்துடனேயே தற்பெருமை கொண்ட ஞானி களையும், பெலவான்களையும் குழப்பத்திற்குள்ளாக்குகிறார். இருக்கிறவைகளை வெட்கப்படுத்தும் படிக்கே அவர் தெரிந்தெடுப்பு இருந்தது. இந்த உலகத்தின் பலவான்கள் நிச்சயமற்ற வாழ்வையும், வேதனையையும், சரீர மரணத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களைவிட தேவன் எளிய மக்களுக்கு நன்மையானவற்றையும், அர்த்தமுள்ள நம்பிக்கையுள்ள வாழ்க்கையையும் கொடுத்திருப்பது எந்த ஒரு எதிர்மறையான காரியமும் இதை விட மிகவும் சிறந்ததாக இருக்க முடியாது. “தன் ஜீவனை வெறுக்கும் ஓர் விசுவாசி அதை நித்திய ஜீவ காலமாய் காத்துக்கொள்வான்” என்று இயேசு கூறுகிறார் (யோவான் 12:24, 25). பெலவீனமாக, வலிமையற்றதாகக் காணப்படும் சிலுவை, தங்கள் சொந்த பெலவீனத்திற்கும், வலிமையின்மைக்கும் உகந்ததாகக் காணப்படுகிறது என்றும் அவர்களின் சமுதாய பெலவீனங்களில் தெய்வீக பெலனைக் காணலாம் என்று அறிவிக்கிறார்.[12]

தேவன் சரீரப்பிரகாரமாக மாம்சத்தில் மனிதனாக தம்முடைய குமாரன் இயேசு கிறிஸ்துவை உருவெடுக்கச் செய்தார் என்பதே

தெளிவான கிறிஸ்தவக் கொள்கை; இதுதான் விசுவாசத்தின் அடிப்படைக் கொள்கை. சரீரத்தையும், ஆவியையும் இலகுவாக வேறுபடுத்திக் காட்டுவதை கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கல்விமான்கள் நன்மையும், பரிசுத்தமானதும் மாம்சமாக வேண்டும் என்பது சாத்தியமானதே என்பதை ஏற்றுக் கொள்ளத் தடுமாறினார்கள். இன்றும் அவ்வாறேதான் செயல்படுகிறார்கள். தத்துவ மேதைகளாகிய போர்ஃபைரி, அப்புலீயியஸ் போன்றவர்"களிடம் நீங்கள் கிறிஸ்தவர்களாக மாற ஏன் மறுக்கிறீர்கள்?" என்று அகஸ்டீன் கேட்டார். அதற்கு பதிலளிக்கும் விதமாக நீங்கள் பெருமையுள்ளவர்களாக இருக்கும் பொழுது கிறிஸ்து தாழ்மை யான கோலத்தில் வந்ததினாலல்லவா? என்று அவரே பதில் கூறினார். "பிளேட்டோவின் கல்விக் கூடத்திலிருந்து வந்த கல்வி மான்களுக்கு கிறிஸ்துவின் சீஷராக மாறுவது என்பது தரக்குறைவான ஒன்று என்பது மறுக்க முடியாத உண்மை." என்று தொடர்ந்து அகஸ்டீன் கூறுகிறார்.[13] மனிதனின் சிருஷ்டிப்பு அதிசயிக்கத்தக்க விதமான இயற்கையாக அமையப் பெற்றிருந்தும் கூட கல்வி மான்கள் தங்களைத் தாங்களே ஊகித்துக்கொண்டும், ஞானிகளென்றும் எண்ணினார்கள்.

**வசனம் 29. மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்** என்பதே கொரிந்தியருக்கான பாடம். சமுதாயத்தில் உயர் நிலையில் உள்ளவர்களும், சாதாரண மக்களும் பாவத்திற்கும் இயலாமைக்கும், அறிவின்மைக்கும் உள்ளாகிறார்கள். தேவனுடைய திட்டங்களை தான் அறிந்து கொண்டேன் என்று கூற முடியாது யாராலும் தேவனுடைய சிந்தையை அறிந்து கொள்ள முடியாது. தேவன் தாமே முன் வந்து ஓர் இரட்சகரை அனுப்பினார் என்பதில் கொரிந்தியர் தங்களை மெச்சிக்கொள்வதில் எந்த விதமான அடிப்படை ஆதாரமும் இல்லை. அவரே தமது செய்தியை உலகிற்கு அறிவிக்க தமது அப்போஸ்தலர்களை அனுப்பினார். எந்தவிதமான மனித தீர்மானத்தின்படி, இந்த கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்பு வரவில்லை. தேவனுக்கு மாத்திரம் தான் மகிமை.

மேன்மை பாராட்டுதல் என்பது அவமானத்திற்கு எதிர் மாறானது. உள்ளான மனிதனில் மனோதத்துவமான மாற்றத்தை இவை குறிப்பிடவில்லை. அவை இரண்டும் நண்பர்களிடமிருந்தும், உறவினரிடமிருந்தும், அயலகத்தாரிடமிருந்தும் ஒருவர் பெறும் கனத்தையும், நன் மதிப்பையும் பொறுத்தது. விருந்து வீட்டில் முதன்மையான ஆசனங்களைப் பெற விரும்புவர்களைக் குறித்த உவமையைக் கூறிய பொழுது அவமானம் என்றால் என்ன என்பதை விளக்கினார். மேலும் "விருந்துக்கு அழைத்தவன் இவனுக்கு

[மதிப்பிற்குரிய மனிதனுக்கு] இடம் கொடு என்று கூறும் பொழுது, நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்குப் போக வேண்டியதாயிருக்கும்." என்று எச்சரித்தார் (லூக். 14:9). முதன்மையான ஆசனத்தை விரும்புகிறவன் தன் உடன் விருந்தாளிகளின் மத்தியில் தன்னை மேன்மைப்படுத்திக் காட்டி அவர்களின் பாராட்டுதலைப் பெறுவதற்காகவே. ஆனால் அவன் தாழ்வான இடத்திற்கு செல்வது அதே மக்களின் மத்தியில் அவமானத்தைப் பெறுகிறான். கிரேக்க மொழியில் "வெட்கம்" என்ற பதத்திற்கு இணையான ஆங்கிலப் பதம் "நிந்தை" மற்றும் "அவமானம்" சமுதாய வட்டாரத்தில் "பெருமைப்படுதல்," "வெட்கம்" ஆகிய இரண்டையும் பற்றி சிந்தித்தார். கொரிந்திய கிறிஸ்தவர் களுக்கு சிலுவையைப் பற்றி பிரசங்கம் செய்வது, பொது மக்களிடையே முகஸ்துதியை உண்டாக்கவில்லை. கிறிஸ்துவுக்குள் ஒருவனும் மேன்மை பாராட்ட முடியாது. இயேசுவண்டை வருவது என்பது தன்பாவத்தையும், தன்தகுதியற்ற நன்மையையும் அறிக்கை செய்வதாகும்.

**வசனங்கள் 30, 31.** பவுலும், அவர் நிருபத்தை வாசித்தவர்களும் **கிறிஸ்துவுக்குள் இருந்தார்கள்.** எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இதை பெருமைப்படுத்திக் கொள்ள முடியாது. அவரின் கிரியைகளினாலே அவர்கள் "கிறிஸ்துவுக்குள்" இருந்தார்கள். தேவனே முன் வந்து அவர்களை இரட்சித்தார். **நீங்கள்** (ὑμεῖς, *humeis*) என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்திருப்பது இது உலகத்தின் ஞானிகளிடமிருந்து கொரிந்தியரை மிகவும் கூர்மையாக வேறுப்பாட்டைக் காட்டுகிறது. "கிறிஸ்துவுக்குள்" இருப்பது என்பது உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுடன் அவர்களுக்குள் உள்ள உறவினால் அவர்கள் இருக்கும் நிலையை அறுதியிட்டுக் கூறுகிறது. அதாவது அவர்களின் வாழ்க்கை, அவர்கள் இருக்கும் நிலை, சமுதாயம், நம்பிக்கை மற்றும் அவர்களின் வருங்காலம் அவரில் இருந்தது. அவரே, அவர்களின் மீட்பிற்கும், நம்பிக்கைக்கும், ஆதாரமும், காரணகர்த்தாவுமாய் இருக்கிறார். எனவே கிறிஸ்து **தேவனால் நமக்கு ஞானமும்** இருக்கிறார். கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பது பவுலுக்கு வாழ்வில் ஏற்படும் ஓர் முற்றிலுமான மாற்றம். அனைத்து தேவபக்தியும், அறிவும், நேசமும் அவரிலேயே மையமாகக் காணப்படுகிறது.

பரத்திலிருந்து வரும் "ஞானமும்" என்பதற்கு இணையாக **நீதி**, **பரிசுத்தமாக்கப்படுதல்**, மற்றும் **மீட்பைக்** கூறலாம் என்று NASB கூறுகிறது. NRSVயும் அதையே ஆமோதிக்கிறது. ஆனால் NIV இந்த பதத்தை வேறு விதமாக விளக்குகிறது. "பரத்திலிருந்து வரும் ஞானம்" இதரத் தன்மைகளையெல்லாம் தனக்குள் உள்ளடக்கிக் கொள்கிறது என்று NIV மொழி பெயர்ப்பாளர்கள் கருதினார்கள். எனவே அந்த வசனத்தைத் "... நமக்கு அவரே தேவனிடத்திலிருந்து வந்த ஞானம் - அதாவது நீதியும், பரிசுத்தமும் மீட்பும் ஆனார்" உலக ஞானத்திற்கும்,

கிறிஸ்துவின் ஞானத்திற்கும் இடையே காணப்படும் தீர்க்கமான வேற்றுமையை பவுல் குறிப்பிடுவதால் NIVயே சரியான அர்த்தத்தைக் கூறுகிறது.

அப்போஸ்தலர் கொரிந்திய கிறிஸ்தவர்களை தத்துவ சாஸ்திர ஞானத்தையும், உலகப்பிரகாரமான கல்வியையும் புறம்பே தள்ளி விடவும், மனிதனின் சுயத்தின் மீது சார்ந்திருப்பதையும் புறம்பே தள்ளவும் சுருக்கமாக வலியுறுத்துகிறார். LXXஸிலிருந்து (எரே. 9:23)ஐ மேற்கோள் காட்டி, ஆனால் தீர்க்கதரிசியின் வேண்டுகோளுக்கு இணங்க அதை கடைப்பிடிப்பதில் பலாத்காரம் செய்யவில்லை. மனித ஞானம், பெலம், அந்தஸ்து ஆகியவற்றில் பெருமைப்பட்டுக் கொள்ள அவற்றில் ஒன்றுமில்லை. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவில் தான் கிறிஸ்தவனின் மகிமை இருக்க வேண்டும். **மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக**, என்று பவுல் மேற்கோள் காட்டுகிறார் (காண்க எரே. 9:23, 24). நசரேயனாகிய இயேசுவில் மேன்மை பாராட்டுவது மிகவும் முறணான காரியம். அவர் பல ஊர்களுக்கு சுற்றித்திரிந்து பிரசங்கம் செய்பவர். அவருக்கு பரம்பரை அந்தஸ்தோ, செல்வ செழிப்போ இல்லை. உலகப் பிரகாரமான புகழையும், வல்லமையையும், அறிவையும் இயேசு வெறுத்தார். அவரைப் போலிருக்க அவருடைய சபையும் அவ்வாறே வாழவேண்டும்.

## நடைமுறை பயன்பாடு

### ஆவியின் வெளிப்பாடும் ஞாபகர்த்தமும் (1:14-16)

“வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது” (2 தீமோ. 3:16) என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறினார். பவுல் தான் தேவ ஆவியைப் பெற்றுள்ளதாக உணர்கிறார் (1 கொரி. 2:13) வேதம் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ளபடியால், கொள்கைகளுக்கும், நற்பண்புகளின் வழி காட்டுதலுக்கும் கிறிஸ்தவர்கள் வேதவசனங்களையே உற்று நோக்குகிறார்கள். ஆவியின் வெளிப்பாடு, அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட திருச்சபை பிரமாணங்களைப் பற்றிய கேள்விகள், வேதபிராணங்களுக்கு இணக்கமாகக் காணப்பட வேண்டும். எனினும், பவுலோ அல்லது வேதாகமப் பகுதிகளை எழுதியவர்களோ, பரிசுத்த ஆவியானவர் அவர்கள் உள்ளத்தில் இடைப்பட்டதினால் ஏவப்பட்டு எழுதிய ஆவணங்கள், எவ்வாறு விநோதமான முறையில் எழுதப்பட்டன என்று விளக்கம் அளிக்கவில்லை. வேதபிரமாணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் ஆவியானவரின் ஏவுதலினால் தனமையும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

பவுல் அப்போஸ்தலர் முதலில் தான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமே

ஞானஸ்நானம் கொடுத்ததாக 1:14ல் குறிப்பிட்டார். பின் தன்னைத்தானே சீர் செய்து கொண்டு ஸ்தேவானுக்கும் அவன் வீட்டாருக்கும் கொடுத்ததாகக் கூறிவிட்டு, பின் ஞாபக மறதியாய் வேறுயாருக்கு கொடுத்தேனோ, அதை அறியேன் என்றார் (1:16). இது பரிசுத்த ஆவி அவர் மனதை முற்றிலுமாக ஆட்கொண்டது மாத்திரமல்லாது பரிசுத்த ஆவியானவருக்கு ஞாபக மறதி இருந்தது என்ற வாதத்திற்கு இடமில்லாமல் செய்தது. பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட பவுலின் வெளிப்பாடு, அவரின் ஞாபக சக்தியின் எல்லைக்குட்பட்டே செயல்பட்டது. சபைக்கு அத்தியாவசியமான தேவைகள், நாம் வாழும் உலகத்தின் சமூக, பண்பாட்டுக்கு ஏற்ற விதத்தில் செயல்பட்டது. 1 கொரிந்தியரை வாசிக்கும் இன்றைய மக்கள் இறையாண்மையையும் 1 கொரிந்தியரின் கொள்கைகள், பண்புகளினால் பெற்றுக்கொள்ளக் கூடிய முக்கியமான தாக்கத்தைப் பற்றி விவரிக்கிறது.

"1 கொரிந்தியர்" என்று நாம் அழைக்கும் எழுதப்பட்ட ஆவணத்தை பவுல் முதல் முதலில் உருவாக்கினார். கொரிந்துவில் இருந்த பவுலின் சம காலத்திய இரண்டாவது தரப்பினர், அதை உடனே பெற்றுக் கொண்டவர்கள் ஆகும். அடுத்து அதை வாசித்தவர்கள் மூன்றாம் தரப்பினர், அவர்கள் அதை எழுதவுமில்லை, அவர்களின் முகவரிக்கு நேரடியாக அனுப்பப்பட்டு அதைப் பெற்றுக் கொண்டவர்களும் அல்ல. 1 கொரிந்தியரிலிருந்து வேதபிரமாண வழிநடத் துதலை பெற்றுக் கொண்ட மூன்றாம் தரப்பினரான வாசகர்கள், நேரடியாக கடிதத்தைப் பெற்ற முதல் தரவாசகர்கள் அவர்கள்தான் என்று விளங்கிக் கொண்டார்கள் என்பதை நாம் விளங்கி கொள்ள வேண்டும். பின் நாம் வாழும் உலகத்திற்கும் உள்ள பொதுவானவைகளையும், வேற்றுமைகளையும் தீர்மானிக்க வேண்டும். வேதத்திலிருந்து, வேதபிரமாணத்திற்கேற்ற வழிநடத்துதலை நாம் தேடும் பொழுது, இன்றைய சபை சந்திக்கும் காரியங்களையே, சற்று மாறுபட்ட விகிதத்தில் பவுல் கலாத்திய சபையும் சந்தித்தார் என்பதை நாம் உறுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக சபையின் ஒருமைப்பாடு பற்றியதான காரியங்கள் (1:10; 11:18) ஒழுக்கக்கேடான நடத்தைகள் (6:9-11) போன்றவை இன்றும் ஒரே மாதிரியாகக் காணப்படுகிறது. ஸ்திரீகள் தலையை மூடிக்கொள்ளும் காரியத்தில் (11:5-16) குறிப்பிட்ட அளவு மாறு பட்டுக் காணப்படுகிறது.

---

குறிப்புகள்

[1]பவுலுக்கும் கொரிந்து சபைக்கும், இடையே ஏற்பட்ட சச்சரவே இந்நிருபத்தை அவர் எழுதுவதற்கான அடிப்படைக் காரணமாக இருந்தது என்று Gordon D. Fee கருதுகிறார். (Gordon D. Fee, *The First Epistle to the Corinthians*, The New International Commentary on the New Testament [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co.,

1987], 28-30.) இதன்படி, பவுல் தன் அப்போஸ்தலத்துவத்தின் அதிகாரத்தை நிலைநாட்டினார் என்று வாதாடுகிறார். பவுலுக்கும், சில குறிப்பிட்ட நபர்களுக்கும் இடையே மனஸ்தாபம் இருந்தது என்பது உறுதி. ஆனால் அந்த மனஸ்தாபம் கடிதத்தின் எல்லாப்பகுதிகளிலும் மேலோங்கியிருந்ததாகக் காணப்படவில்லை. [2]LXX, அல்லது செப்டுவஜின்ட், பழைய ஏற்பாட்டு வேதாகமத்தின் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [3]Victor Paul Furnish, *Theology and Ethics in Paul* (Nashville: Abingdon Press, 1968), 155. [4]கலாத்தியர், 1 கொரிந்தியர் தவிர்த்து யோவான் 1:42ல் மாத்திரம் தான் பேதுரு "கேபா" என்று அழைக்கப்படுகிறார். பவுல், பேதுருவை ஏதாவது ஓர் சமயத்தில் தான் "பேதுரு" என்று அவரை அழைத்தாலும், "கேபா" என்ற பெயர் தான் அவர் விரும்பும் பெயராக இருந்தது. [5]Gerd Theissen, *The Social Setting of Pauline Christianity: Essays on Corinth*, ed. and trans. John H. Schütz (Philadelphia: Fortress Press, 1982), 55. [6]I. Howard Marshall, *New Testament Theology: Many Witnesses, One Gospel* (Downers Grove, Ill.: InterVarsity Press, 2004), 268. [7]கடைசி வார்த்தையைத் தவிர, பிற வார்த்தைகள் LXX ல் ஏசாயா 29:14 லிலிருந்து பவுல் எடுத்து எழுதியிருக்கிறார். "ஞானிகளின் ஞானத்தை அவமாக்குவேன்" (ἀθετήσω, *athetēsō*) என்று தேவன் சொன்னதற்கு பதிலாக, LXX ல் "நான் மறைப்பேன் ..." (κρύψω, krupsō). [8]Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 46. [9]Brevard S. Childs, *Biblical Theology of the Old and New Testaments: Theological Reflection on the Christian Bible* (Minneapolis: Fortress Press, 1992), 512. [10]Origen *Against Celsus* 3.55.

[11]John Gager, "Shall We Marry Our Enemies?: Sociology and the New Testament," *Interpretation* 36 (July 1, 1982): 262. [12]Troels Engberg-Pedersen, "The Gospel and Social Practice according to 1 Corinthians," *New Testament Studies* 33 (October 1987): 562. [13]Augustine *City of God* 10.29.